பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 20 புதன்கிழமை (05.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 229

புதிய மாற்றத்துடன்...
மக்களின் சேவையை உறுதி செய்ய
கனேஷ்வரன் வேலாயுதம்

6
சுயேட்சைக்குழு - 06
சிவன் பவுண்டேசன்

# மகிந்த பிரதம வேட்பாளர் என்றால் விவாதம் நடத்துவதற்கு தயார்

## ரணில் விக்கிரமசிங்க அழைப்பு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளர் இல்லை என வும், இதனால் அவருடன் எவ்வித விவாதத்திற்கும் செல்ல தான் தயாராக இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப் பின் பிரதமர் வேட்பாளர் இல்லை என அந்த கூட்ட மைப்பின் தலைவரும் ஜனா திபதியுமான மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக கூறியுள்ளதை ரணில் சுட் டிக்காட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தான் சுதந்திரக் கூட்

24ஆம் பக்கம் பார்க்க

பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
அரசியல் உரிமையையும், அபிவிருத்தியையும், வாழ்வாதாரத்தையும் வென்றெடுக்க வீணைக்கு வாக்களிப்போம்!!!

4 டக்ளஸ் தேவானந்தா
முதன்மை வேட்பாளர்
வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

6
7
பசுபதி சீவரத்தினம்
முருகேசு சந்திரகுமார்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) (C-358)

பாராளுமன்றத் தேர்தல் 2015 யாழ்.மாவட்டம்

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டபின் இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் சேவைக்கு வந்தவர் விஜயகலா மகேஸ்வரன். அடுத்த எமது அரசாங்கத்தில் முக்கியமான அமைச்சை அவருக்கு வழங்குவோம்
யாழ்.பிரசாரக்கூட்டத்தில் ரணில்
ஐ.தே.க. முதன்மைவேட்பாளர்
திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முன்னாள் மகளிர் விவகார பிரதியமைச்சர், ஐ.தே.க.வின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர்)
எமது எதிர்காலம்

3
(060)

பாராளுமன்றத் தேர்தல் -2015
யாழ்.மாவட்டம்

மாமனிதர் குமார்பொன்னம்பலம்
தாய் நாட்டைத் தாரை வார்த்தேனும் தனி வீடு பெற்றிட வேண்டும்.. என்று தமிழரை ஏமாற்றும் தலைமையை நிராகரித்து
புதிய வரலாறு எழுத வாக்களிப்போம்..
தனித் தலைவன் மாமனிதன் குமார் வழியே தேசியத் தலைவன் வழி செல்லும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு வாக்களிப்போம்

4
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
L.L.B. LONDON, BARRISTER-AT-LAW
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)

நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்
எம் மக்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச் சின்னம்
அங்கஜன் இராமநாதன்
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

1
(C-354)
புதிய நாடு ~ புதிய தலைவர் ~ புதிய தலைமுறை ~ புதிய எதிர்பார்ப்பு

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2015 (யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்)
படைமுகாமை பல்கலைக்கழகமாக மாற்றியவர்கள்


7
4
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
சந்திரகுமார் முருகேசு டக்ளஸ் தேவானந்தா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

வெல்டிங் வேலை , Photoshop தெரிந்த வேலையாட்கள் உடன் தேவை. வயதெல்லை: 20-25

தொடர்பு: 0770878483

K.K.S. வீதி, கோண்டாவில்.

(சி-1748)

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்திற்கு புடைவை அனுபவம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை. (பழகுபவர்களும் மாநகரசபைக்குட்பட்டவர்களும் விரும்பத்தக்கது) (1405)

சிவனேசன் ரெக்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.


# குழப்பத்தில் முடிந்து போன காணாமல் போனோர் விபரப்பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழில் காணாமல் போனவர்கள் தொடர்பான பதிவுகள் நேற்றைய தினம் யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியில் மேற்கொள்ளப்பட்ட நிலையில் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கும் ஏற்பாட்டாளர்களுக்குமிடையில் குழப்பநிலை ஏற்பட்டது.

யாழ்.மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமற் போனவர்களின் விபரங்களை பதிவு செய்வதற்கு வருமாறு கடந்த திங்கட்கிழமை பத்திரிகைகளில் காணாமற் போனோர் சங்கத் தலைவி கே.ஸ்ரீகாந்தி என்பவரால் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

குறித்த விளம்பரத்தையடுத்து நேற்றைய தினம் கிறீன் கிறாஸ் விடுதியில் காணாமல் போனோரின் உறவினர்களில் ஒரு தொகுதியினர் வருகை தந்திருந்தனர். அவர்களுடன் வருகை தந்திருந்த போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் சகாதேவனுக்கும் ஏற்பாட்டாளர்களுக்குமிடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தில் காணாமற்போனோர் சங்கத் தலைவி போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் சகாதேவன் தன்னை ஒளிப்படம் எடுக்க முற்பட்டதாக கூறி அவரை தாக்கியுள்ளார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து சகாதேவன் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஸ்ரீகாந்தி மீது முறைப்பாடு செய்திருந்தார். தம்மை வைத்து அரசியல் இலாபத்திற்காக பலர் பயன்படுத்துவதாக விசனம் கொண்ட காணாமற் போனவர்களின் உறவினர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டிருந்தனர். தொடர்ந்து அப்பகுதியில் சிறிது நேரம் பதற்ற நிலை காணப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (செ-9)


"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

## வாழ்த்துக்கள் முதற்தடவையாக

A/L பரீட்சைக்குத் தோற்றும்
தொழில் நுட்பப் பிரிவு மாணவர்கள் அனைவரும்
சிறந்த பெறுபேறுகளைப் பெற
விஸ்டம் கல்லூரிச் சமூகம் வாழ்த்துகின்றது.

(சி-1734)

விஸ்டம்

## விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

## உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

(சி-1742)

## Diploma In Spoken English

புதிய பிரிவு ஆரம்பம்
08.08.2015 @ 8.00மணி
(இப்பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில், காலை 7.30 - 9.30 வரை இடம்பெறும்)

ஆங்கில மொழியைக் கற்பித்துப்பேச வைப்பதில் வடமாகாணத்தில் முதன்மை ஆங்கிலக் கல்லூரி

உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்
University of Cambridge (UK) Certificates
CITY & GUILDS (UK) Certificates
E-CITY Diploma in English Certificates
City & Guilds
அனுமதிகள் வழங்கப்படுகின்றன

E-CITY COLLEGE OF ENGLISH
இல.372, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ். 0773400418/0212217106

(சி-1743)

## G.A.Q (பழைய பாடத்திட்டம்) பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

மேற்படி பல்கலைக்கழகத்தினால் கடந்த காலத்தில் பதிவினை மேற்கொண்டு பரீட்சை எடுக்காதவர்களும் பரீட்சை எடுத்து சித்தி அடையாதவர்கட்கும் மார்கழி மாதம் நடைபெறும் பரீட்சையே இறுதிப் பரீட்சையாகும் என்பதை அறியத் தருகின்றோம்.

பரீட்சை வழிகாட்டல் வகுப்பு
ஆரம்பம்: 08.08.2015 (காலை 8.00)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்

விபரங்களுக்கு:
S.அருள்நங்கை (நிர்வாகி)
T.P.No.: 021 222 8148, 0778469721, 0778019187 (சி-1740)

## காணி விற்பனைக்கு

சுழிபுரம் பறாளாய் வீரதேவன் வயல் (பிள்ளையார் கோவில் முன்பாக) 10 பரப்பு வயல் காணி உடன் விற்பனைக்கு உண்டு. (கிணற்றுடன்).

தொடர்புகளுக்கு : தம்பையா, பண்ணாகம்
077 2087562, 077 4765990

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

எம் மக்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட
ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச் சின்னம்

## அரச உத்தியோகத்தர் நிலை மேம்பாடு 180நாட்களுக்குள்......

- ✔ ஜனாதிபதி மைத்திரி பாலா சிறிசேனாவினூடாக அரச உத்தியோகத்தருக்கான சம்பளம் ரூபா 25 ஆயிரமாக உயர்த்துவேன்.
- ✔ அரச உத்தியோகத்தர்களுக்கு வடமாகாணத்தில் நிலவுகின்ற தர உயர்வுகள், சம்பள அதிகரிப்புக்கள், பதவி வெற்றிடங்கள் என்பனவற்றை அரச சுற்று நிருபத்திற்கு ஏற்ப சரியான நேரத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
- ✔ கடந்த காலங்களில் யுத்த பிரதேசங்களில் கடமையாற்றிய அரச உத்தியோகத்தர்களிற்கு புலி முத்திரை குத்தப்பட்டு பதவி உயர்வுகள் இல்லாமலும் பழிவாங்கப்பட்டவர்களிற்கும் கஸ்ட பிரதேசங்களில் மக்களுக்கு சேவையாற்றியவர்களிற்க்கும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதற்கு ஏதுவாக விசேட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து அவர்களின் பதவி உயர்வுகளிற்கும் வழி செய்வேன்.
- ✔ பட்டப்படிப்பினை முடித்து கடந்த யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு காலம் கடந்த நியமனத்திகதி இடப்பட்டு வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின், ஆசிரியர்களின்,அரச உத்தியோகத்தர்களின் நியமனத்திகதியினை 3 வருடங்களிற்கு முன் நகர்த்தி அவர்களின் வருடாந்த தர உயர்விற்கு நடவடிக்கை எடுப்பேன்.

## அங்கஜன் இராமநாதன்

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)



X
1

புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# சமஷ்டியை நிராகரித்தன பிரதான அரசியல் கட்சிகள்!

## இந்திய ஊடகம் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சமஷ்டிக் கோரிக்கையை நிராகரித்துள்ளதாக இந்தியாவின் ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஜே.வி.பி ஆகியன இதனை நிராகரித்துள்ளதாக அந்த செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## நம்பகரமான தேர்தல் அவசியம்



(கொழும்பு)

பொதுத் தேர்தலையும் வாக்கெண்ணும் நடவடிக்கைகளையும் நம்பக தன்மையுடன் நடத்துமாறு பொதுநலவாய அமைப்பின்

23ஆம் பக்கம் பார்க்க....

## பாரத கொலை வழக்கு நீதவான் குழு விசாரணை

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை வழக்கு குறித்த விசாரணைகளுக்கு மூவர் அடங்கிய நீதவான் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் இந்த நீதவான் குழுவினை நியமித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட

23ஆம் பக்கம் பார்க்க....

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சந்திரிகாவை நீக்க ஆலோசனை

### சுசில் பிரேமஜெயந்த!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் நீக்குவது தொடர்பில் கட்சியின் அடுத்த மத்தியகுழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடும் அர்ஜுன ரணதுங்கவின் தேர்தல் அலுவலகத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சென்றிருந்தார்.

இந்நிலையில், ஐக்கிய தேசியக்



கட்சியுடன் இணைந்து கொண்டமைக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்

23ஆம் பக்கம் பார்க்க....

## அக்ஷன் பாம் படுகொலை

### 9ஆண்டுகள் நிறைவுற்றும் இன்னும் நீதி கிடைக்கவில்லை

(திருகோணமலை)

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் பிரெஞ்சு தன்னார்வ தொண்டு நிறுவன உள்ளூர் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்து பத்தாவது ஆண்டு தொடங்கும் நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தங்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 4ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் போர் உச்சகட்டத்தை எட்டியிருந்த நேரத்தில் இந்தப் படுகொலைச் சம்பவம் நடைபெற்றது.

அக்ஷன் பாம் தொண்டு நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் 4 பெண்கள் உட்பட 17 பேர் தங்களது வீடுகளுக்கு திரும்ப முடியாமல அலுவலகத்தில் முடங்கியிருந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## காஸ், மின் கட்டணத்தை குறைப்பதற்கு திட்டம்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலையையும், மின்சாரக் கட்டணத்தையும் குறைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இதன்படி சமையல் எரிவாயுவின விலையை மேலும் 100 ரூபாயினால் குறைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணங்களை மேலும் குறைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

விலைகள் குறைப்பது குறித்து மின் வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும், ரவி கருணாநாயக்கவும் பிரதமரை இந்த வாரத்தில் சந்திக்கவுள்ளனர்.

மின்சாரக் கட்டணக் குறைப்பின்போது, 90 அலகுக்கு குறைவாக பயன்படுத்தும் நுகர்வோருக்கு கூடுதல் சலுகை வழங்க தீர்மானிக்கப் பட்டுள்ளது.

90 அலகுக்கு அதிகமாக பயன்படுத்தும் நுகர்வோருக்கும் சலுகை வழங்கப்படவுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## கந்தரோடையில் முகமூடிக் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலையில் வீடுகளுக்குள் புகுந்த முகமூடிக் கொள்ளையர்களால் சுமார் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் இரண்டரை லட்சம் ரூபாய் பணம் என்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கந்தரோடை சுப்பிரமணியம் வீதியில் உள்ள வீடு ஒன்றினுள் முகத்தை வெள்ளைத் துணியால் மூடிக்கட்டிய நால்வர் கூரை வழியாக உள் நுழைந்து அங்கிருந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## ஒரு டொலர் இருப்பது நிரூபித்தால் இறப்பேன்

### மகிந்த தெரிவிப்பு!



(கொழும்பு)

எனக்கு ஒரு டொலர் இருப்பதாக நிரூபித்தால் நான் இறப்பதற்குத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் குருநாகல் மாவட்ட வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஹொரனையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ,

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 250

## அஹங்காரத்தை விடுதல்

...வெறுமனே வீட்டிலிருந்து கொண்டு மற்றவர்களைச் சந்தோஷமாக வைத்திருப்பது மிகவும் சுலபமல்லவா? காரணம் என்னவெனில், நீங்கள் இழுக்கப்படுவது, இருப்புத் தன்மை நிலையில்.

இது ஒருமுறை என்னை அடையாளம் கண்டுகொண்டு விட்டால் மீண்டும் உங்களைத் திரும்பிச் செல்ல அனுமதிக்காது. முடியுமானால் முயற்சி செய்து பாருங்கள். உங்களால் தப்பிக்க முடியாது!



உங்களுடைய இருப்புத் தன்மைக்கு என்னைத் தெரியும். ஆனால், உங்கள் மனம் தான் தடையாக இருக்கிறது. ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்... எப்பொழுதும் உங்கள் இதயத்தையே பின்பற்றுங்கள்.

நீங்கள் இங்கு அதைத் தான் செய்ய வேண்டும். உங்கள் இதயத்தைப் பின்பற்றினால், என்னை அடைந்துவிடுவீர்கள். உங்கள் மனதைப் பின்பற்றும்பொழுது என்னைத் தவறவிட்டுக் கொண்டே இருப்பீர்கள்.

நீங்கள் உங்களை என்னிடம் இழப்பதற்கு மிகவும் அஞ்சுகிறீர்கள். அது தான் பிரச்சினை. உங்கள் அஹங்காரம் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கிறது.

உங்கள் அடையாளத்திற்குப் பாதுகாப்பில்லாமல் போய்விடும் என்று அஞ்சுகிறீர்கள். உங்கள் அடையாளம் கரைந்து மறைந்துகொண்டிருப்பதாக உணர்கிறீர்கள்.

உங்கள் அடையாளம் இன்றி எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறீர்கள் என்று ஆச்சரியப்படத் தொடங்கியிருக்கிறீர்கள். உங்கள் அஹங்காரம் ஒரு கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டிருக்கிறது.

இது நிகழும் பொழுது வாழ்க்கையில் மற்ற சூழ்நிலைகளைப் போலவே, உடனே அஹங்காரம் அதன் ஆகாரத்தைக் கேட்கிறது; ஆனால், இங்கு உங்களால் அதை நிறைவேற்ற முடியாது.

அதனால் என்னை சந்தேகப்பட ஆரம்பித்து விடுகிறீர்கள். பல வகையிலும் உங்கள் உணர்வுகளுக்கான காரணங்களை ஆராய ஆரம்பித்து விடுகிறீர்கள்.

முழுமையானதும் தீர்வு காணமுடியாததுமானதற்கு தீர்வு காணத் தொடங்குகிறீர்கள். உங்கள் மனம யானையின் துதிக்கையைப்போல இங்கும் அங்குமாக- ஒரு புறம் என் மீது தீவிரமாக அன்பில் இருந்து மறுபுறம் அந்த அன்பையே தீவிரமாக சந்தேகப்படும் அளவிற்கு- ஆடுகிறது.

நினைவில் வையுங்கள்... அன்பு உங்கள் இதயத்தில் இருந்து வருகிறது. ஆனால், பயமோ உங்கள் மனதில் இருந்து வருகிறது. எப்பொழுதும், எப்பொழுதுமே, உங்கள் இதயத்தையே பின்பற்றுங்கள்.

அன்பு இயற்கையானது; அச்சமோ சமூகத்தாலானது. பயமும் சந்தேகமும் ஒன்றுக்கொன்று ஆழமாகத் தொடர்புள்ளவை. அவை உங்களுக்குள் பதிந்துவிட்டவெறும் நெறிப்படுத்தல்கள்தான்.

மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். சந்தேகப்படுவதில் எந்தவிதத் தவறும் இல்லை. சந்தேகம் ஞானமடைவதற்கு தீப்பந்தம்போல வழிகாட்டும். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### ரத்த வேட்டை நிகழ்த்திய கொடூர வேட்டைக்காரி: அதிர்ச்சியில் ஆழ்த்தும் புகைப்படங்கள்


அமெரிக்காவை சேர்ந்த பெண்மணி ஒருவர் காட்டு விலங்குகளை வேட்டையாடிய புகைப்படங்கள் இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.







அமெரிக்காவின் இடாகோ மாநில த்தை சேர்ந்த Sabrina Corgatelli என்பவர், சமீபததில் தென் ஆப்ரிக்கா வின் க்ரூகர் தேசிய பூங்காவிற்கு சென்றுள்ளார். அங்குள்ள ஊழியர்களுக்கு 10 ஆயிரம் டொலருக்கு மேலாக பணம் கொடுத்துவிட்டு, ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை, ராட்சத மான் மற்றும் பல அரிய காட்டு விலங்குகளை வேட்டையாடியுள்ளார். வேட்டையாடிய விலங்குகளுடன் கம்பீரமாக புகைப்படம் எடுத்துக்கொண்ட அவர், அதனை தனது பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்துள்ளார். இந்த புகைப்படத்தை பார்த்து அதிர்ச்சியடைந்த இணையதள வாசகர்கள், தங்களது எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர். ஆனால், இந்த கண்டனங்களை பார்த்த Sabrina , என்னை வெறுப்பவர்கள் காத்திருங்கள். இன்னும் ஏராளமான புகைப்படங்கள் காத்திருக்கிறது என்று கூறியுள்ளார்.




### பிரெட் மோதகம்



**தே.பொருட்கள்:**

ஓட்ஸ் - 1 கப்,
ரவை - 2 டீஸ்பூன்,
மைதா - 1/2 கப்,
அரிசி மாவு - 3 டீஸ்பூன்,
தேங்காய் - 1/2 மூடி (துருவியது), சர்க்கரை - துருவிய தேங்காய்க்கு சமமான அளவு, உப்பு - தேவையான அளவு, பிரெட் - 6 ஸ்லைஸ் (தூளாக்கிக் கொள்ளவும்).

**செய்முறை:-**

ஓட்ஸ், ரவை, மைதா, அரிசி மாவு, பிரெட் தூள், தண்ணீர், உப்புச் சேர்த்து சப்பாத்தி மா பதத்துக்கு பிசைந்து வைக்கவும். தேங்காய், சர்க்கரையை சமமான அளவு சேர்த்து பூரணமாக கலந்து வைக்கவும். மாவைத் திரட்டி, அதன் நடுவில் பூரணத்தை வைத்து மோதகம் போல் செய்து, ஆவியில் 15 நிமிடங்கள் வேக வைத்து இறக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் பாதாளக் குழு உறுப்பினர் இல்லை

(கொழும்பு)

**புளுமெண்டல் பிரதேசத்தில் ரவி கருணாநாயக்கவின் தேர்தல் பிரசார நடவடிக்கையின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த நபர் பாதாளக் குழு உறுப்பினர் இல்லை என உறுதியாகியுள்ளது.**

உயிரிழந்தவர் கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தை சேர்ந்த 30-வயதுடைய நிரோஷன் சம்பத் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் ஒரு சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர் எனவும், அவர் கயிறுகள், பாய்கள் முதலியனவற்றை விற்பனை செய்து அன்றாட வாழ்க்கையை நடத்தி சென்ற நபராவார்.

அதற்கமைய இந்நபர் பாதாளக் குழுவை சேர்ந்தவர் என வெளியிடும் கருத்தை முற்றிலும் நிராகரிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் புளுமெண்டல் துப்பாக்கிச்சூடு சம்பவம் பாதாளக் குழு மோதல் என்பதற்கான எவ்வித சாட்சிகளும் இல்லை என பொலிஸ் அதிகாரி என்.கே.இலங்ககோன் தெரிவித்தார்.

இது டிலான் பெரேராவின் கருத்திற்கு பதிலளிக்கும் வகையிலாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





## மனமார்ந்த நன்றி



ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் நிகழ்வு கடந்த 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை யாழ். சரஸ்வதி மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் எட்டு பல்துறைசார் முதன்மையாளர்களது சேவைகளைப் பாராட்டி கௌரவ விருதினை ஈ.சிற்றி நிறுவனம் வழங்கி கௌரவித்தது.

அதில் இந்து மதத்திற்கும் ஆன்மீகத்திற்குமான கௌரவிப்பிற்காக **ஆன்மீகப் பேரொளி** என்னும் விருதினை எனக்கு தந்து சிறப்பித்தமைக்காக ஈ.சிற்றி இயக்குநர் ஜெ.றஜீவன் அவர்களுக்கும் ஈ.சிற்றி சமூகத்தினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். விருதினைப் பெற்ற ஏனைய சாதனையாளர்களையும் வாழ்த்துகின்றேன். ஈ.சிற்றி ஆங்கிலக் கல்வி நிறுவனத்தினுடைய சமய, சமூக, கல்விப் பணிகள் சிறந்தோங்க எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் உடனுறை ஸ்ரீமத் சிவசிதம் பரேஸ்வரப் பெருமானை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள் அமைப்பாளர்**
**வீணாகானகுருபீடம், குருமகா சன்னிதானம், சித்தன்கேணி.**

(C-1744)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கான யோகா

சிறுவர்களின் ஆளுமை, தன்னம்பிக்கை, ஒழுக்கவிழுமியங்கள், கல்வியில் ஈடுபாடு, குழுச் செயற்பாடு, படைப்பாக்கத்திறன் போன்றவற்றை விருத்தி செய்து உடல், உள ஆன்மீக மேம்பாட்டைத் தரவல்ல மூச்சுப்பயிற்சி, யோகாசனங்கள், தியானம், விளையாட்டுக்கள் அடங்கிய வாழும்கலை யோகா எனும் அற்புதமான பயிற்சி நாளை 6 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணி முதல் 12 மணிவரை 254, பிறவுண் வீதியில் உள்ள வாழும்கலை நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி ஆசிரியர் டி. சாயிராம்ஜி (இந்தியா) 8 வயது முதல் 13 வயது வரை உள்ள சிறுவர்கள் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என வாழும் கலை அமைப்பினர் அறிவித்துள்ளனர். (இ

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு திருவருள் மிகு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய வேட்டைத் திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறுவதுடன் தேர்த்திருவிழா 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடை பெறவுள்ளன.

மஹோசவத் திருவிழாவின் ஆரம்ப சாந்தி நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 127 இந்திய மீனவர்கள் ஏழு மாதங்களில் கைது

(யாழ்ப்பாணம்)

**கடந்த 7 மாதங்களில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 127 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து கைது செய்யும் நடவடிக்கை நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் இந்த வருடம் கடந்த 7 மாதங்களில் 4 தடவைகளாக பருத்தித்துறை, நெடுந்தீவு கடற்பரப்புக்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். அவர்களுடன் சேர்த்து 18 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

அவர்களில் இதுவரை 101 இந்திய மீனவர்களும் அவர்களுடைய 15 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

மிகுதியாகவுள்ள 26 இந்திய மீனவர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடைய 3 படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் யாழ்.மாவட்ட நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சட்டாமா அதிபர் திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்குரிய ஆலோசனை கிடைக்கப் பெற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஞான சிரோன்மணி பட்டம் வழங்கி கௌரவிப்பு

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் 60ஆவது ஆண்டுநிறைவையொட்டி நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்து ஆராய்ச்சி மாநாடு நிகழ்வில் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம குருபீடாதிபதி ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவசுவாமிகளுக்கு ஞானசிரோன்மணி என்னும் பட்டம் சூட்டி இந்துமா மன்றத்தினர் கௌரவித்துள்ளார்கள். (இ

## போராளிகளின் சுதுமலைக்கூட்டத்துக்கு மானிப்பாய் பொலிஸார் அனுமதி மறுப்பு

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஒன்றிணைந்து அமைத்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி தனது தேர்தல் விஞ்ஞானபத்தை நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சுதுமலை அம்மன் கோயில் வீதிச் சுற்றாடலில் வைத்து வெளியிடத் தீர்மானித்திருந்த போதிலும், அதற்கான கூட்டத்துக்குரிய அனுமதியை வழங்க மானிப்பாய் பொலிஸார் மறுப்புத் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.

28 ஆண்டுகளுக்கு முன்னர், 1987 இல் இதே ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியன்று சுதுமலை அம்மன கோயில் சுற்றாடலில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்துத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமது முக்கிய அரசியல் முடிவுகள் அடங்கிய உரையை ஆற்றியிருந்தார்.

அதே இடத்தில், அதே தினத்தில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கு முன்னாள் புலிகள் எடுத்த முயற்சி பொலிஸ் அனுமதி மறுப்புக் காரணமாக கைகூடாமல் போயுள்ளது.

முன்னாள் விடுதலைப் புலிகளின் ஜனநாயகப் போராளிகள் கட்சி யாழ். மாவட்டத்தில் சிலந்திச் சின்னத்தில் சுயேட்சையாகத் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## காரியாலயம் திறப்பு

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை கிளைக் காரியாலயம் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசாவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வேட்பாளர், சட்டத்தரணி சுமந்திரன் திறப்பு விழாவிற்கு தலைமை தாங்குவார். அலுவலக திறப்பு விழாவைத் தொடர்ந்து சொற்பொழிவுகளும் இடம்பெறும். (இ-7)

## முதியவர்களுக்கான உதவிக்கொடுப்பனவு

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான ஆடிமாத உதவிக் கொடுப்பனவு நாளை வியாழக்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளது. எனவே மேற்படி உதவிக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் அனைவரும் நாளைய தினம் தொடக்கம் தங்களது கொடுப்பனவுகளை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் என கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (இ-5-60)




## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியீடு செய்யப்படுகின்ற ஞானச்சுடர் மலரின் 211 ஆவது ஆடி மாத ஞானச்சுடர் மலர் வெளிவந்துள்ளது. (இ-5)

## தென்னிந்தியக் கலைஞர்கள் பங்கேற்கும் திருமறைக் கலாமன்றத்தின் பொற்தூறல்

(யாழப்பாணம்)

பொன் விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற 'பொற்தூறல்' நிகழ்ச்சித்தொடரின் இம்மாதத்துக்கான நிகழ்வு 'ஆவணித் திங்கள் பொற்தூறல்' என்னும் பெயரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 09.08.2015 மாலை 5 மணிக்கு, இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலா மன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்சிகளாக யாழ்.சக்ஸபோன் சகோதரர்கள் யசோதரன் நவஷரூபன் மற்றும் யசோதரன் காண்டீபன் ஆகியோர் வழங்கும் சக்ஸபோன் இசைச்சங்கமும், இந்தியாவில்இருந்து வருகை தரும்சென்னை-கலைக்கூடம் நாட்டியப்பள்ளியின் இயக்குநரும், நாட்டிய கலாவித்தகி ஸ்ரீமதி பார்வதி ரவி கண்டசாலாவின் மாணவியுமான "நிருத்திய சிரோன்மணி "நாட்டிய கலா விபஞ்சி" முருகசங்கரி லியோவும், அவரது குழுவினரும் வழங்கும் நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

## மஹோற்சவ திருவிழா 14 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதிவெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


செல்வச்சந்நிதி கோயில்

இதற்கமைய 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் நடைபெறுவதுடன் தொடர்ந்து 27 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சம்பறத் திருவிழாவும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

உற்சவ காலங்களில் தினமும் காலை வேளைப் பூஜைகள் காலை 8 மணிக்கும் இரவு நேரப் பூஜைகள் மாலை 5 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (இ-5)

## வடமாகாணத்தில் 18,701 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்

வடமாகாணத்தில் 18ஆயிரத்து 701 மாணவர்கள் இன்று ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இதேவேளை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் தங்களது எதிர்கால இலட்சியக் கனவை அடையவும் அனைவரும் சிறப்பான சித்திகளைப் பெறவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.(இ-3)




யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வயல்விழா கண்காட்சி நேற்றைய தினம் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இத் தொழில்நுட்பவியல் கண்[illegible] மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்களுக்கு புதிய தொழில்நுட்பம் தொடர்பான விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (படங்கள்:சோபிகா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



புதிய அரசியல்....

X 3

3 பட்டம்: நேர்மை, தகமை, சேவை

சுயேட்சைக் குழு-5 பொதுத்தேர்தல் 2015

வாக்குகளை பிரித்துப்போடுங்கள்
ஒவ்வொரு அணிக்கும் ஒருவர், இருவர்போதும்
உண்மை - ஒர், இரு நல்லவர் எல்லா அணியிலும்
அது ஒருவரை ஒருவர் தட்டிக்கேட்கும்
தனிக்கட்சி ஆதிக்கம் தம்மை தாமேதான் பாதுகாக்கும்
உரிமைக்கும் உண்மைக்கும் உங்கள் வாக்கு

வீ.ஆ.ஜெயசங்கரி B.A.
(Public Administration & Governance)
(அரச நிர்வாகமும் ஆட்சியும்)

(062)

பல்திறன்களை பலமுனைகளில் தெரிவு செய்வீர்



பாராளுமன்ற பொதுத் தேர்தல்-2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



4

(056)

காசிப்பிள்ளை குலசேகரம்
B.A. Dip-in Ed, MEd
தமிழர் விடுதலைக் கூட்டணி

X 4

நேர்மையான அரசியல் தடத்தில் பயணிக்க...



பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்.மாவட்டம்



5

(சி-351)

ந.மதிஅழகராசா (மதி)
வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்

X 5

தமிழர் விடுதலைக் கூட்டணி

வெறும் பேச்சுக்களை நம்புபவன் தமிழன் அல்ல...



பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்

சுயநலமற்ற பணி,
நேர்மையான செயற்பாடு,
பாரபட்சமற்ற நோக்கு,
கண்ணியமான அரசியல்....

எங்களுக்கான அரசியல் தலைமையை
நாங்களே தெரிவுசெய்வோம்.
- யாழ், கிளிநொச்சி மக்கள்.

அர்ப்பணிப்பு! அனுபவம்!! எளிமை!!!

X 7

(சி-347)



7

திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம் அவர்களின் புதல்வன்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)


## சிகிச்சை பலனின்றி இளைஞர் மரணம்

(கரணவாய்)

பருத்தித்துறை-தம்பசிட்டிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றமோட்டார்சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன் (வயது-32) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழநதார்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளின் ரயர்கழன்றதில்மோட்டார்சைக்கிள் மதகுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் குறித்த இளைஞர்மோட்டார்சைக்கிளு ப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலே சிகிச்சை பலனின்றி உயிரி

## 60 லீற்றர் கள்ளு பறிமுதல்

சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட 60லீற்றர் கள்ளு பருத்தித்துறைப்பொலிஸாரினால்நேற்று முன்தினம் திங்கட்கிழமை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கள்ளுகான்களைக்கொண்டு சென்ற இரு நபர்களில் ஒருவர் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டதுடன் மற்றைய சந்தேகநபர் தப்பியோடியுள்ளார்.

குறித்த நபர்கள் மோட்டார் சைக்கிள்களில் வேகமாக வருவதை அவதானித்த பொலிஸார் இரு மோட்டார் சைக்கிள்களையும் இடைமறித்த போதே கள்ளு பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டது. மற்றையநபர் கள்ளு கான்களுடன் மோட்டார் சைக்கிளினையும் விட்டு தப்பியோடியுள்ளார்.இதேவேளைகைதான நபரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டபோதே மற்றைய நபர் தப்பியோடியுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது கைது செய்யப்பட்ட நபர் பருத்தித்துறை பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள் ளதுடன் கள்ளு கான்களும் மீட்கப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

தப்பியோடியுள்ள மற்றைய சந்தேகநபரினை பருத்தித்துறைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (இ-5-60)

### சிறப்புச் சொற்பொழிவு

பண்டிதர் பொன். சுகந்தனின் சிறப்புச் சொற்பொழிவுகள் எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் வரலாற்று பிரசித்தி பெற்ற ஆலயங்களில் நடைபெறவுள்ளன.

இதற்கமைய 8 ஆம் திகதிசனிக்கிழமை அம்பாறை திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலா யுதசுவாமி ஆலயத் தில் மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகெல்லாம் எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இரவு 7.30 மணிக்குநடைபெறவுள்ளது.

மறுநாள் 9 ஆம் திகதி பொலநறுவை மன்னம்பிட்டி முருகன் ஆலயத்தில் கந்தன் கருணை எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இரவு 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)


**தேவை**

வேப்பம் விதை விலைக்கு வாங்கப்படும்.
தொடர்புகளுக்கு: தில்லையம்பலம் கந்தையா, ஸ்றோர்ஸ், ஆனைக் கோட்டை. 021 225 5718



**சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**டச்சு வீதி, சாவகச்சேரி**

பதிவு இல:-J/1594 பதிவு திகதி:-11.03.1972

### கட்டட ஒப்பந்தகாரர் கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் ஆளுமையின் கீழ் இயங்கும் கீழ்வரும் விபரப்படியான கிளைகள் மற்றும் செயற்பாட்டு அலகுகளை புதிதாக அமைப்பதற்கும் திருத்தங்களை மேற்கொள் வதற்கான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன.

01. 198 பெருங்குளம் கிளை நிலையத்திற்கு இருபக்க மதில் அமைத்தல்
02. 200 சரசாலை கிளைக்கான சுற்றுமதில் மற்றும் கட்டடம் அமைத்தல்
03. காரியாலய வளவில் அமைந்துள்ள வெல்ல நிலையம் திருத்தி அமைத்தல்
04. காரியாலய வளவில் அமைந்துள்ள வாகனத்தரிப்பிடம் திருத்தி அமைத்தல்
05. மடத்தடி காணியிலுள்ள கடைக்கட்டடம் திருத்தி அமைத்தல்

மேற்காண் செயற்பாடுகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களுடைய விண்ணப் பங்களை 20.08.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர்,பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி,சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி

குறிப்பு:-மேலதிக விபரங்களினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் கடமை நேரத்தில் பார்வையிட்டுக்கொள்ளலாம்.

தலைவர்
ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்,
சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு:
021 321 3572
021 227 0086



**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை**
**ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்**

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம்-09
ஆதன இலக்கம்- 186 (புதிய பதிவு) பிப்பிலி வீதி.

வட்டாரம் 09 பிப்பிலி வீதி, ஆதன இலக்கம் 186 (புதியபதிவு) இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை பிரதேச செயலகம் சண்டிலிப்பாய், பிரதேசசபை மானிப்பாய் (வலி. தென்மேற்கு) கிராம சேவையாளர் பிரிவு ஜே/134, நவாலி வடக்கு, "மானாக்கை வளவு" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குளி 14.61 கொண்ட இவ்வாதனமானது நவாலி வடக்கைச் சேர்ந்த திருநாவுக்கரசு பெண் செல்வரத்தினம் ஆகிய இவர்களால் நன்கொடை உறுதி மூலம் அதே இடத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு சுரேன் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.எம்.தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 11679 ஆம் இலக்க 2010.02.10 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "மானாக்கை வளவு" நிலப்பரப்பு 02 குளி 14.61 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் திருநாவுக்கரசு சுரேன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(1402)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த சிறந்த முறையிலான திட்டமிடல் அவசியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரம் மருதையினார் வீதியின் அருகேயுள்ள கழிவு வாய்க்காலில் இருந்து நெற்பயிர்களுக்கு நீர்பாயும் வாய்க்காலுக்கு வீதியை ஊடறுத்து நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இங்கு இரண்டடி சுற்றளவு கொண்ட நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளதால் பிரதான வாய்க்காலைச் சேதமடையச்செய்து வயல் காணிகளையும் சேதமடையச்செய்யும் நிலை ஏற்படுமென விவசாயிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த கழிவு வாய்க்கால் பல தடவைகள் திருத்தம் செய்யப்பட்டபோதிலும் கிராமத்திற்கு ஒரு மில்லியன் என்ற வேலைத்திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி இந்நீர்க்குழாய்கள் நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் செலுத்தும் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட நீர்க்குழாய் ஒரு அடி



அகலமுள்ளதாக கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களத்தினால் அமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அகலம் கூடிய நீர்க்குழாய்கள் இவ்விடத்தில் இருந்து அகற்றப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகலம் கொண்ட நீர்க்குழாய் பொருத்தும் நடவடிக்கை நன்கு திட்டமிடப்படாத நிலையில் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனை நடைமுறைப்படுத்தி ஒரு மில்லியன் வேலைத்திட்ட நிதியில் ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபா வரையிலான நிதி வீணடிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகளாலும் அக்கிராம மக்களாலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே கிராம ரீதியிலான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது திட்டமிடலை சிறந்தமுறையில் செயற்படுத்த வேண்டுமெனவும் இதன் மூலம் பொது மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடியவாறு அதிகாரிகள் செயற்பட வேண்டுமெனவும் பாதிப்பிற்குள்ளாகும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (2-254)

# 110 தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## மத்திய கல்வி அமைச்சின் தகவலின்படி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இரு தேசிய பாடசாலைகளில் அதிபர்கள் நியமிக்கப்படாமை உட்பட நாடு தழுவிய ரீதியிலுள்ள 110 தேசிய பாடசாலைகளில் அதிபர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு கடந்த ஜூலை மாதம் 12 ஆம் திகதி பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பித்தவர்களுக்கு எழுத்துப் பரீட்சை நடைபெற்றுள்ளது.

பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் விபரங்கள் கிடைக்கப்பெற்றதும் அவர்களுக்கான நேர்முகத்தேர்வு விரைவில் நடத்தப்படுமென மத்திய கல்வி அமைச்சின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மு/ வித்தியானந்தாக் கல்லூரி, மு/ மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய இரு தேசிய பாடசாலைகளும் மத்திய கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அமைந்துள்ளன.

மேற்படி இரு தேசிய பாடசாலைகளுக்கும் மாகாண கல்வி அமைச்சின் கீழ் கடமையாற்றிய அதிபர் தரம் II இல் உள்ள அதிபர்கள் இருவர் மத்திய கல்வி அமைச்சின் கீழ் உள்ளீர்க்கப்பட்டு தற்போது கடமையாற்றுகின்றனர்.

ஆயினும் தேசிய பாடசாலை அதிபருக்குரிய நியமனக் கடிதம் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. இவ்வாறான ஒரு நிலையிலேயே மேற்படி இரு பாடசாலைகள் உட்பட நாடு தழுவிய ரீதியிலுள்ள 110 தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு தேசிய பாடசாலைக்குரிய அதிபர் நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# பட்டதாரிகள் சங்க தலைவர் கைதானார்

வவுனியா பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ஆனந்தராஜா நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, குட்செட் வீதியில் இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறியே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை அவர் பயணித்த வாகனம் வவுனியா குட்செட் வீதியில் விபத்துக்குள்ளாகியமையும் குறிப்பிடத்தக்கது. (2)










வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியும் லண்டன் ஜெயாஞ்சலி நிறுவனமும் இணைந்து வழங்கிய நாட்டிய பெருவிழா கடந்த 2ஆம் திகதி வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வை தென்னிந்திய நடனத்துறை சார்ந்த வெள்ளித்திரை, சின்னத்திரை கலைஞர்களுடன் சுவிஸ், நோர்வே, டென்மார்க் மற்றும் இலங்கை கலைஞர்கள் இணைந்து வழங்கியிருந்தனர்.



வவுனியா தோணிக்கல் பகுதியிலிருந்து வவுனியா நகரை நோக்கி பயணித்த வாகனம் குட்செட் வீதியில் நேற்று முன்தினம் வீட்டு வேலி வழியாக உள்நுழைந்து விபத்துக்குள்ளானதைப் படத்தில் காணலாம்.

# அதிபர்கள், ஆசிரியர்களிடமிருந்து வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியிலுள்ள தேசிய பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கான 2016 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றத்திற்குரிய விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நாடு தழுவிய ரீதியிலுள்ள தேசிய பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான 2016 ஆம் ஆண்டு இடமாற்றத்திற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவங்கள் தேசிய பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் பிரிவு பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இடமாற்றங்கள் ஆசிரியர் இடமாற்ற சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படுமென தேசிய பாடசாலைகள் பிரிவு பணிப்பாளர் பி.என். ஐயப்பெரும தெரிவித்துள்ளார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாடாளுமன்றத் தேர்தலில்

# 18 இலட்சத்து 70 ஆயிரத்து 73 பேர் வடக்கு-கிழக்கில் வாக்களிக்கத்தகுதி

நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 18 இலட்சத்து 70 ஆயிரத்து 73 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதனடிப்படையில், கிழக்கு மாகாணத்தில் 10 இலட்சத்து 87 ஆயிரத்து 776 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 இலட்சத்து 65 ஆயிரத்து 167 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 4 இலட்சத்து 65 ஆயிரத்து 757 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 2 இலட்சத்து 56 ஆயிரத்து 852 பேரும் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தில் 7 இலட்சத்து 82 ஆயிரத்து 297 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். இதற்கிணங்க யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 இலட்சத்து 29 ஆயிரத்து 239 பேரும், வன்னி மாவட்டத்தின் மன்னாரில் 79 ஆயிரத்து 433 பேரும் வவுனியாவில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 705 பேரும், முல்லைத்தீவில் 63 ஆயிரத்து 920 பேரும் வாக்களிக்கவுள்ளனர். இம்முறை நாட்டில் ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன் தேர்தல் மூலம் 196 பேரை தெரிவு செய்வதற்காக 6151 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் ஓகஸ்ட் 17 இல் நாடு முழுவதும் 12 ஆயிரத்து 21 வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் வாக்களிக்கவுள்ளனர். (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 45 செவ் இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4805 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 7 3/4<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: MLT/ அரச தொழில்<br>தொ.இ: G/4814 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 47 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC/ ஜேர்மனி<br>தொ.இ: B/4806 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 42 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4816 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 14 1/2 சூரி,செவ் 11 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4809 | பிறப்பு: 1995 RC<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 44 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/4818 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 39 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4810 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 49 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்<br>தொ.இ: G/4823 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# தேர்தல் வியூகம்

# மாற்றத்தை உருவாக்க முடிந்த ஆற்றல்மிகு எங்கள் கரங்களில் அரசியல் பலத்தைத் தாருங்கள்!

### டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

**மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கொள்கை வழி நின்று பேரம் பேசும் அரசியல் பலத்தோடு நாம் அரசுடன் கூட்டாட்சி நடத்தியிந்தால் எமது மண்ணில் எமது மக்களின் குருதி வெள்ளம் பாய்ந்த அவலங்களை தடுத்து நிறுத்தியிருப்போம் எனவும் மாற்றத்தை உருவாக்க முடிந்த ஆற்றல் மிகு எங்கள் கரங்களில் அரசியல் பலத்தைத் தாருங்கள் எனவும் ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உங்களது வாக்குரிமையே உங்கள் ஒளிமயமான வாழ்வுரிமையை தீர்மானிக்கும் பலம்.

உங்கள் வாக்குப்பலத்தால் நாடாளுமன்ற நாற்காலிகளை மட்டும் அலங்கரித்தவர்கள்,

ஊடகங்களில் செய்திகள் வர வேண்டும் என்பதற்காக மட்டும் நாடாளுமன்றத்தில் உணர்ச்சி பொங்க பேசியவர்கள், நீங்கள் வழங்கிய அரசியல் பலத்தோடு நாடாளுமன்றம் போனவர்கள் உங்களுக்காக எதையும் ஆற்றியிருக்கவில்லை. நாமும் நாடாளுமன்றத்தில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இருந்து வந்திருக்கிறோம்.

அரசிலும் நாம் பங்கெடுத்து, அமைச்சராகவும் நான் இருந்து வந்திருக்கிறேன். தொடர்ச்சியாக நீங்கள் எமக்கு வழங்கி வரும் சிறிய அரசியல் பலமும், உங்களது ஒளிமயமான வாழ்வுரிமைக்காக உழைக்க வேண்டும் என்ற எமது விருப்பங்களும், அரசுடனான எமது நல்லுறவுகளும், அதனால் உங்களுக்காக அரசில் பங்கெடுக்க கிடைத்த வாய்ப்புகளுமே இந்தளவிற்காவது உங்களை நிமிர வைத்திருக்கிறது.

நீங்கள் அதி கூடிய வாக்குகளை வழங்கி, யாருக்கு அரசியல் பலத்தை கொடுத்து நாடாளுமன்றம் அனுப்பினீர்களோ, அந்த அதிகூடிய வாக்குகளையும், அரசியல் பலத்தையும் எமக்கு நீங்கள் தந்திருந்தால், அந்த அரசியல் பலத்தோடு நாங்கள் நாடாளுமன்றம் சென்றிருந்தால், மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கொள்கை வழி நின்று பேரம் பேசும் அரசியல் பலத்தோடு நாம் அரசுடன் கூட்டாட்சி நடத்தியிருந்தால், எமது மண்ணில், எமது மக்களின் குருதி வெள்ளம் பாய்ந்த அவலங்களை தடுத்து நிறுத்தி, பாலாறும் தேனாறும் கலந்தோட வழி சமைத்திருப்போம்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைவிதியை நாமே மாற்றியமைத்திருப்போம்.

ஆனாலும், துரதிஷ்ட வசமாக உங்களது அதி கூடிய வாக்குகளும், அரசியல் பலமும் எமக்குக் கிடைத்திருக்கவில்லை. ஆனாலும், நீங்கள் வழங்கிய சொற்பமான அரசியல் பலத்திற்கு அளவாக நாம் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றியிருக்கின்றோம்.

போதிய அரசியல் பலமின்றி நாம் ஆற்றிய பணிகளை நினைத்துப்பாருங்கள்.

உங்கள் அரசியல் பலத்தோடு நாடாளுமன்றம் சென்ற ஏமாற்றுத் தமிழ் தலைமைகள் உங்களுக்காக எதை செய்தார்கள் என்பதையும் எண்ணிப்பாருங்கள்.

எமக்கான அரசியல் பலமின்றியும், நாங்கள் உங்களுக்காக செய்ய விரும்பி செய்து முடித்த வரலாற்றையும், நீங்கள் வழங்கிய அரசியல் பலத்தோடு நாடாளுமன்றம் சென்றும் ஏமாற்றுத்தமிழ் தலைமைகள், உங்களுக்காக எதையும் செய்திராத வரலாற்று தவறுகளையும் உங்கள் மனக்கண்களால் எண்ணிப்பாருங்கள்!

உங்கள் மனச்சாட்சியின் நீதித்தராசில் நிறுத்துப்பாருங்கள்! ஏமாற்றுத் தமிழ் தலைமைகளின் வாலாற்றுத் தவறுகளோடும், மாற்றத்தை உருவாக்கும் ஆற்றல் மிகு எங்கள் மாற்றுத் தலைமையின் வரலாற்று சாதனைகளோடும், மறுபடியும் உரிமை மடலில் சந்திப்போம்! வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடம் எமது மக்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் இவைகளே எங்கள் இலட்சியக் கனவுகள், அதை அடையும் யதார்த்த வழி முறையே மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!! நாம் செல்லும் பயணம் வெல்லும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## ராசி பலன்

05.08.2015
(ஆடி 20, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 3.36 மணிவரை
ரேவதி பின்னிரவு 2.25 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34- 6.04 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | |
| | இரவு 2.14 இற்கு மேட சந் | | சூரி செவ் |
| | | | குரு சுக் புதன் |
| | | சனி | ராகு |

வளவன்

**மேடம்:** மன அமைதி கூடும் நாள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பயணத்தால் பலனுண்டு.

**இடபம்:** இனிய தகவல்கள் வந்து சேரும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், வாகன சுகமுண்டு.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, திடீர் பயணங்களால் நன்மையுண்டு, வேலைச் சுமை கூடினாலும் பலனுண்டு, வெறுத்த சிலர் உங்களிடம் விரும்பிவந்து சேரலாம்.

**சிம்மம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், குடும்பத்தில் இடையிடையே சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், ஆரோக்கியமான நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தூரத்து உறவினர்களின் வருகையுண்டு, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்:** புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொருளாதார நலன் கருதி வெளியூர் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பழசை மறக்காதீர்கள்!

நீண்ட நேரமாக அந்தக் குருவிகள் மகிழ்ச்சியுடன் மலையடிவாரத்தையே சுற்றிக் கொண்டிருந்தன.

பின்னர் அவைகள் காகத்தை "ஆஹா... ஓஹோ" என்று புகழத் தொடங்கின.

சிறிது நேரத்தில் காகமானது குருவிகளை அழைத்துக் கொண்டு ஓர் மலையருவிற்குச் சென்றது.

மலையிலிருந்து அருவி நீர் விழுகின்ற காட்சியைப் பார்த்ததும் காகமானது குருவிகளை நோக்கியது.

"குருவிகளே! நீங்கள் இந்தக் கண் கொள்ளாக்காட்சியினைப் பாருங்கள்! நீங்கள் மட்டும் அந்த பூவரசு மரத்திலேயே அடைபட்டுக் கொண்டிருந்தால் இந்தக் காட்சியினை காணமுடியுமா?" என்று கேட்டது.

"ஆமாம்! காகமே! உண்மைதான்! நாங்கள் பூவரசு மரத்திலேயே அடைப்பட்டிருந்தால், இத்தகைய இயற்கைக் காட்சிகளை எல்லாம் பார்த்திருக்கமுடியாது. உன்னோடு வந்ததால்தான் இந்தக் காட்சிகளை எல்லாம் பார்க்க முடிந்தது.

இனிமேல் தொடர்ந்து இந்தக் காட்சிகளை நாங்கள் பார்த்து மகிழ வேண்டும்! அதற்கு நீ தினமும் எங்களை அழைத்து செல்ல வேண்டும்," என்றன குருவிகள்.

"அதனாலென்ன தினம், தினம் உங்களை நான் தாராளமாக இவ்விடத்திற்கு அழைத்து வருகிறேன்," என்றது காகம்.

அதன் பின்னர் காகமும், குருவிகளும் மீண்டும் பூவரசு மரத்தை நோக்கிப் பறந்து சென்றன. சிறிது நேரத்தில் அவை தங்கள் கூடுகளில் அடைந்து கொண்டன.

மறுநாள் காகமானது காலையில் எழுந்ததும், குருவிகளை அழைத்துச் செல்ல புறப்பட்டது.


ஆனால், கூட்டில் குருவிகள் இல்லாததைக் கண்டு திடுக்கிட்டது.

உடனே அது சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தது. பின்னர், அந்த மரத்தை விட்டு வேகமாக பறந்து சென்றது. அங்கிருந்து பறந்து சென்ற காகமானது கடற்கரையை வந்தடைந்தது.

கடற்கரையில் குருவிகள் எல்லாம் கூட்டமாக நின்றபடி தங்களுக்குள் ஏதோ சண்டையிட்டுக் கொண்டிருப்பதை கண்டதும் அவைகளின் அருகே சென்றது. ஆனால், காகம் வந்து நிற்பதை அந்தக்குருவிகள் கண்டுகொள்ளவில்லை.

அவைகள் காகத்தைப் பார்த்தும், பார்க்காதது போன்று தங்களுக்குள் சண்டையிடத் தொடங்கின.

குருவிகள் எல்லாம் எதற்காக இப்படி சண்டையிடுகின்றன என்பதை அறிந்து கொள்ள காகத்திற்கு ஆவலாகயிருந்தது.



உடனே அவைகளின் அருகே நின்றபடி அவைகள் போடுகின்ற சண்டையைக் கவனித்தது.

குருவிகளில் ஒன்று, "நாம் வசிப்பதற்கு ஏற்ற இடம் இந்தக் கடற்கரைதான்," என்றது.

மற்றொரு குருவியோ, "இல்லை... இல்லை... நாம் வசிப்பதற்கு ஏற்ற இடம் மலையடிவாரம்தான்!" என்றது.

"அட முட்டாள்களே! நாம் வசிப்பதற்கு ஏற்ற இடம் மலைநீர் அருவி பாய்கிறதே! அந்த இடம்தான்!" என்றது இன்னொரு குருவி.

இப்படி குருவிகள் எல்லாம் எந்த இடத்தில் வசிக்கலாம் என்று ஒன்றோடு ஒன்று சண்டையிட்டுக் கொணடிருந்தன.

அந்த நேரத்தில் காகம் குருவிகளில் நடுவே போய் நின்றது.

"குருவிகளே! உங்கள்சண்டையை நிறுத்துங்கள்! நான் ஒரேயொரு நாள்தான் உங்களை எல்லாம் வெளியே அழைத்து வந்தேன். ஆனால், அதற்குள் நீங்களோ இப்போது வசித்துக் கொண்டிருக்கும் இடத்தையே மறந்துவிட்டு அந்த இடத்தில் வசிக்கலாம்! அந்த இடத்தில் வசிக்கலாம் என்று ஒருவரோடு ஒருவர் சண்டையிட ஆரம்பித்து விட்டீர்கள்.

நான் அருகில் நின்று கொண்டிருப்பதையே மறந்து ஒருவருக்கொருவர் சண்டையிடுகின்றீர்கள்! நான் இது வரையிலும் எத்தனையோ இடங்களுக்குச் சுற்றியிருக்கிறேன்.

எங்கெல்லாமோ அலைந்திருக்கிறேன். நான் இதுவரையிலும் இருக்கின்ற இடத்தை மறந்ததில்லை. ஆனால், நீங்கள் வெளியே சுற்றிப் பார்க்க வந்த ஒரு நாளிலேயே இருந்த இடத்தையே மறந்து விட்டீர்களே. நாம் எந்த சூழ்நிலையிலும் இருக்கின்ற இடத்தை மறந்து விடக்கூடாது," என்றது.

காகத்தின் அறிவுரையைக் கேட்ட குருவிகள் எல்லாம் தங்களின் தவறை உணர்ந்தன.

"காகமே! நாங்கள் பெரும் தவறு செய்துவிட்டோம்! ஏதோ நீ எங்களை நான்கு இடங்களுக்கு கூட்டிச் சென்று காண்பித்தாய்! நாங்களும் அதுதான் உலகம் என்று நம்பிவிட்டோம்! அதனால் அப்படியொரு தவறினைச் செய்யத் துணிந்துவிட்டோம்! இனி மேல் எங்களது இருப்பிடமான அந்த பூவரசு மரத்தை ஒருபோதும் மறந்திட மாட்டோம்!" என்றன.

குருவிகள் திருந்தி விட்டதைக் கண்டு காகம் மகிழ்ச்சியடைந்தது.

(முற்றும்)

## 08.2015 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1100 - இங்கிலாந்து மன்னனாக முதலாம் ஹென்றி முடி சூடினான்.
- 1806 - இலங்கையில் முகமதியர்களுக்கான திருமணச் சட்ட விதிகள் அரசியல் நிர்ணய சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்பினர் லூசியானாவில் மிசிசிப்பி ஆறு வழியே அமெரிக்கப் படைகளை விரட்டினர்.
- 1870 - புருசியர்களுக்கும் பிரெஞ்சுப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் புருசியா வெற்றி பெற்றது.
- 1884 - விடுதலைச் சிலைக்கான அடிக்கல் நியூயோர்க் துறைமுகத்தில் பெட்லோ தீவில் நாட்டப்பட்டது.

1914 - ஐக்கிய அமெரிக்காவும் பனாமாவும் கூட்டாக பனாமாக் கால்வாய் ஒப்பந்தத்தைல் கைச்சாத்திட்டன.

- 1940 - இரண்டாம் உலகப் போர்: லாத்வியா சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ட்ரொய்னா என்ற இடத்தில் போர் இடம்பெற்ற போது காலை 11:00 மணிக்கு எட்னா மலை வெடித்தது. இதன் புகை மண்டலம் பல மைல் உயரத்துக்குக் கிளம்பியது.
- 1944 - போலந்து தீவிரவாதிகள் அங்கு செயற்பட்டுக் கொண்டிருந்த ஜேர்மனிய தொழிற் பண்ணையொன்றில் இருந்து 348 யூதர்களை விடுவித்தனர்.
- 1949 - எக்குவாடோரில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 6000 பேர் கொல்லப்பட்டனர். 50 நகரங்கள் அழிந்தன.
- 1960 - புர்கினா பாசோ (அப்பர் வோல்ட்டா) பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1962 - 17 மாதத் தேடுதலின் பின்னர் நெல்சன் மண்டேலா கைது செய்யப்பட்டார். இவர் 1990 வரை விடுவிக்கப்படவில்லை.
- 1962 - அமெரிக்க நடிகை மரிலின் மன்றோ லாஸ் ஏஞ்ஜெலீசில் உள்ள அவரது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.
- 1969 - மரைனர் 7 செவ்வார்க் கோளிக்கு மிகக் கிட்டவாக (3,524 கிமீ) சென்றது.
- 1979 - ஆப்கானித்தானில் மாவோயிஸ்டுகள் இராணுவப் புரட்சி ஒன்றை முன்னெடுத்தனர்.
- 1989 - நிக்கராகுவாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களில் சண்டினீஸ்டா வெற்றி பெற்றது.

### பிறப்புக்கள்

- 1850 - மாப்பசான், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1893)
- 1898 - கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, வயலின் இசைக்கலைஞர் (இ. 1970)
- 1908 - ஹரல்ட் ஹோல்ட், ஆஸ்திரேலியாவின் 17 ஆவது பிரதமர் (இ. 1967)


1923 - தேவன் நாயர், சிங்கப்பூர் ஜனாதிபதி

- 1930 - நீல் ஆம்ஸ்ட்றோங், சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதர்
- 1968 - நளாயினி தாமரைச்செல்வன், ஈழத்து எழுத்தாளர்
- 1968 - மரீன் லெ பென், பிரெஞ்சு அரசியல்வாதி
- 1987 - ஜெனிலியா, இந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

- 1895 - பிரெட்ரிக் ஏங்கல்ஸ், மாக்சியத் தத்துவவியலாளர் (பி. 1820)
- 1962 - மாரிலின் மன்றோ, அமெரிக்க நடிகை (பி. 1926)
- 1984 - றிச்சார்ட் பேர்ட்டன், ஆங்கிலேய நடிகர் (பி. 1925)
- 1991 - சொயிச்சீரோ, ஹொண்டா, ஹொண்டா நிறுவனத்தின் தாபகர் (பி. 1906)

## நீல் ஆம்ஸ்ட்றோங்



நீல் ஆல்டன் ஆம்ஸ்ட்ராங் (Neil Armstrong, நீல் ஆம்ஸ்ட்ரோங், ஆகஸ்ட் 5, 1930 ஆம் திகதி பிறந்தார்.

இவர் அமெரிக்க விண்வெளி வீரரும் சந்திரனில் தரையிறங்கிய முதல் மனிதரும் ஆவார். அத்தோடு இவர் வான்வெளிப் பொறியியலாளர், கப்பல்படை விமானி, வெள்ளோட்ட விமானி, மற்றும் பல்கலைக்கழகப் பேராசியர் போன்ற பதவிகளையும் வகித்துள்ளார்.

ஆம்ஸ்ட்ரோங், விண்வெளி வீரராக வருவதற்கு முன்னர் ஐக்கிய அமெரிக்கக் கடற்படையில் அதிகாரியாக இருந்து கொரியப் போரில் பணியாற்றினார். போரின் பின்னர் பெர்டு பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலைப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு தேசிய வானூர்தியியல் ஆலோசனை செயற்குழுவின் அதிவேக விமானம் நிலையத்தில் வெள்ளோட்ட விமானியாகப் பணி புரிந்தார்.

தேசிய வானூர்தியியல் ஆலோசனை செயற்குழுவே தற்பொழுது டிரைடன் விமான ஆராய்ச்சி மையம் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு அவர் 900 இற்கும் மேற்பட்ட விமானங்களை ஒட்டியுள்ளார். நீல் ஆம்ஸ்ட்ரோங் பின்னர் தனது பட்டப் படிப்பை தென் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தார்.

1969, ஜூலை 20 இல் அமெரிக்காவின் அப்போலோ - 11 விண்கலத்தில் எட்வின் ஆல்ட்ரின், மைக்கேல் கொலின்ஸ் ஆகியோருடன் பயணித்த ஆம்ஸ்ட்றோங் முதலில் சந்திரனில் காலடி வைத்தார். இவரைத் தொடர்ந்து ஆல்ட்ரினும் சந்திரனில் தரையிறங்கினார். இவர் சந்திரனில் காலடி எடுத்துவைக்கும் போது முதலில் இடது காலையே வைத்தார். ஜூலை, 2012 இல் இதய அறுவைச்சிகிச்சை செய்திருந்தார், அதில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இறந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் புகழ் தோசிபா நிறுவனத்தின் மோசடிகள்!



…வேலை நேர அதிகரிப்பால் எத்தனையோ நாட்டு தொழிலாளிகள் பைத்தியங்களாக அலைகின்றனர்.

சிறுநாடுகளின் பணமதிப்பு பீதுடைத்த காகிதமாக சரிந்து நிற்கிறது.

முதலாளித்துவத்தின் முரண்பாடு ஏகாதிபத்தியமாக நாடுபிடிக்கும் நாய்ச்சண்டையாக வந்து நிற்கிறது.

தோசிபாவின் தனித்த எடுத்துக்காட்டு மெய்ப்பிக்கும் களநிலைமைகள் இதுதான்.

இதைச் சொன்னால் முதலாளிகள் செய்த தவறுக்கு முதலாளித்துவமா காரணம் என்று சிலர் வழக்கமாக கேட்பார்கள். சோசலிசத்தில் ஒரு கம்பெனியின் மேலாளர் இதே போன்று உற்பத்தியை ஊதிப் பெருக்கிக் காட்டுகிறார் என்று வைப்போம். அப்பொழுது சோசலிசம் தவறு என்று சொல்லலாமா? இதுவும் ஒரு கேள்வி.

இப்படிக்கேள்வி கேட்பவர்கள் அடிப்படையில் ஒரு கோட்பாட்டுடனே நம்மை அணுகுகிறார்கள். இந்தக் கோஷ்டியின் கோட்பாட்டின்படி "ஆசை என்பது மனிதனின் இயல்பு. ஆசைகள் இருக்கிற இடத்தில் இதுபோன்று தவறுகள் நடக்கும். பொதுவுடமைச் சமூகம் தனிமனித ஆசைகளைக் கட்டுப்படுத்துகிறது. ஆகையால் அத்தகைய சமூகமே நீடிக்காது" என்று கம்யூனிஸ்டுகளை புத்தம் சரணம் கச்சாமி என்று புத்தர்களாக காட்டுகிறார்கள். மறுபக்கம், "இப்படி தவறுகள் நடப்பது இயல்பு" என்கிறார்கள்.

நாம் அவர்கள் பார்வையின் படியே சற்று அணுகுவோம். ஒரு கம்பெனியில் ஆசையின் பொருட்டு மனிதன் ஊழல் செய்கிறான் என்று வைப்போம். இதைத் தீர்ப்பதற்கு அல்லது தவறுகளை களைவதற்கு கம்யுனிசமோ கம்யுனிஸ்டுகளோ தேவையில்லை. இன்றைக்கு தோசிபா நிறுவனத்தைப் பொறுத்தவரை அதன் விசாரணைக்கமிட்டியே ஊழலைக் கண்டுபிடித்து இருக்கிறது என்று வைப்போம். சோசலிச நடைமுறை சுட்டிக் காட்டுவது இதைத்தான். தங்களுக்குள் ஏற்படும் தவறுகளை, ஆசை உணர்வுகளை மனிதர்கள் தங்கள் குழுக்களுக்குள்ளாகவே தீர்த்துக்கொள்ள இயலும்.

ஆனால், மனித உணர்வுக்கு அப்பால், குழு செயல்பாட்டுக்கு வெளியே தன்னிச்சையாக செயல்படும் மூலதனம் தோற்றுவிக்கும் முரண்பாட்டிற்கு எது தீர்வு? இது தான் கம்யுனிஸ்டுகள் முதன்மையாகக் கேட்கிற கேள்வி!

இதற்கு விடையளிக்க வேண்டிய முதலாளித்துவ சட்டமும் அரசும் தோசிபாவின் விசயத்தில் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

அரசு என்பது யாருக்கானது?

கார்ப்ரேட் கவர்னன்ஸ் வேண்டும் என்று கேட்கிற வர்க்கங்களின் பிரதான நலன்கள் என்ன? இதுபற்றி மறந்தும் மூச்சுக்கூட விடமாட்டார்கள் முதலாளிகளும் அவர்தம் அடிப்பொடிகளும்.

ஏனெனில் ஓர் உற்பத்தி சமூகமயமாகிருக்கிறபொழுது, இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ முறையில் இலாபம் கிடைக்க வேண்டுமானால் சுரண்டுபவன் ஒருவனாக சுரண்டப்படுபவன் ஒருவனாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

அதாவது தோசிபாவின் இலாபவெறியை நிறைவு செய்ய,குறைந்த கூலியைப் பெறும் தொழிலாளிகள் இருக்க வேண்டும். கைப்பாவை அரசு இருக்க வேண்டும். கைக்கூலி மோடி இருக்க வேண்டும்! மானியங்கள் வெட்டப்பட வேண்டும். அரசும் சட்டமும் நீதி எந்திரங்களும் வளைக்கப்படவேண்டும்.

ஆக இங்கு தெளிவாக நிரூபணமாகியிருப்பது விசாரணைக் கமிசன்களின் தேவையல்ல. அது எந்த உற்பத்தி சமூகத்திலும் செயல்பட முடியும்.

ஆனால் தொழிலாளிகளுக்கென்று சட்டமும் அரசும் அதிகாரமும் இல்லையென்றால் நடப்பது என்ன என்பதுதான் கேள்வி? அல்லது ஆசைக் கோட்பாட்டை சற்று மாற்றிப் போடுவோம். தொழிலாளிகள் தங்களது ஆசையை நிறைவேற்றிக்கொள்ள தடுப்பது எது? ஏன் இங்கு மட்டும் முதலாளிகள் தொழிலாளிகளின் அதிகாரத்தைக் கண்டு பயப்பட வேண்டும்? இங்கேதான் அரசு என்பதன் தார்மீக நிலைப்பாட்டை புரிந்துகொண்டு நாம் முதலாளித்துவத்தை அம்பலப்படுத்துகிறோம்.

ஒவ்வொரு நாட்டிலும் மூன்று பிரதான வர்க்கங்கள் இருக்கின்றன. பெரும்பான்மையாக தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் சுயதொழில் செய்வோர் முதல் வகை. இவர்தம் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இங்கு அரசோ, நீதிமன்றமோ, காவல் துறையோ பத்திரிகைகளோ கிடையாது. பாட்டாளி வர்க்கம் தன்னை விடுவித்துக் கொள்ள தம்மைத் தாமே அமைப்பாக்கிக் கொண்டு போராடுவதைத் தவிர வேறு யாரையும் நம்பியிருக்க முடியாது.

இரண்டாவது வகையில் வருபவர்கள் நடுத்தரவர்க்கம். அறிவுத்துறையினர், நடுத்தர அரசு அலுவலர்கள், நடுத்தர வணிகர்கள், பெருமளவில் நிலம் வைத்திருக்கும் விவசாயம் செய்யும் விவசாயிகள். இவர்கள் ஒன்று இரங்கத்தக்க சீர்திருத்தங்களுக்கான கோரிக்கைகளை முன்வைப்பது அல்லது சமூகத்தில் இழிநிலையில் தான் மட்டும் தப்பித்தால் போதுமானது என்று வாழ்பவர்கள்.

தண்ணீர் தனியார்மயமும் விவசாயிகளின் தற்கொலையும் இவர்களை ஒருபோதும் அசைத்ததில்லை. பங்குச்சந்தையில் முதலீடு, வாழ்நாள் முழுவதும் வீட்டு லோன, கார் லோன் கட்டுவது என்று சமூகத்திலிருந்து தம்மை துண்டித்துக் கொண்டு உதிரிகளாக இருப்பவர்கள். மூன்றாவதாக வருபவர்கள் பன்னாட்டு நிறுவனங்கள், தரகு முதலாளிகள், அரசின் அங்கங்கள், இராணுவம், காவல் துறை, பன்னாட்டு நிதி முனையங்கள், ஏகாதிபத் திய அரசுகள்.


இதில் தோசிபாவின் விசயத்தில் தீர்மானம் செய்பவர் யார்? கார்ப்ரேட் கவர்னென்ஸ் வேண்டுமென்று கேட்டவர் யார்? சப்பானின் நிதியமைச்சர் முதலீட்டாளர்களுக்கு சாதகமான நிலைமை உருவாக்கப் படும் என்று சொன்னது யாருடைய நலன்களுக்காக? தொழிலாளிகள் விசயத்தை இதில் யார் பிரதிநிதித்துவப்படுத்தியது? பத்திரிகைகள் எங்கே போயின? நீதிமன்றங்கள் எங்கே?

இந்தக் கேள்விகளுக்கான் விடைகளை எந்தப் பாசாங்கும் இன்றி நம்மால் எளிதில் கண்டுபிடிக்க முடியும். மூலதனத்தின் முரண்பாட்டை தீர்க்க வேண்டுமென்றால், நாம் மேலடுக்கை அப்புறப்படுத்த வேண்டும். முதலாளிகளுக்கு முட்டுக்கொடுக்கும் நான்கு தூண்களும் நமக்கானதல்ல. இதுதான் தோசிபாவின் விசயத்தில் நாம் அடையாளம் காண்கிற விசயங்கள்.

இப்பொழுது முடிவுரைக்கு வருவோம். முதலாளித்துவமா? சோசலிசமா? என்பது பட்டிமன்ற தலைப்பல்ல. ஏனெனில் முதலாளித்துவம் அனைவருக்குமானதல்ல என்பதை தோசிபாவின் கணக்கு காட்டுகிறது.

-இணையம்- (முற்றும்)

---



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து–203**

…இன்னியப் இப்பப் புத்தி வந்துருச்சுன்னு சொல்லி அழுது பொலம்ப ஆளு இல்ல எனக்கு. அப்பன் இல்ல; ஆத்தா இல்ல; சொந்தபந்தம் இல்ல. ஒண்ட வந்த வளும் ஓடிப்போனா.

அத்தவிட்டவ நீ ஒருத்திதாண்டி இருக்க நான் அழுது பொலம்ப. திமிராப் பொழச்ச ஊர்ல நான் இப்பிடிச் சீரழிஞ்சு சாகப்படாது. போறேன்; கண்காணாத எடத்துல காணாப் பொணமாப் போயிர்றேன்.

எங்க போற.

தெரியல.

எப்பிடிப் பொழப்ப?

தெரியல.

எங்கூட வா. நான் இருக்கிறவரைக்கும் கல்லப் புழிஞ்சாச்சும் ஒனக்குக் கஞ்சி ஊத்துறேன்.

மாட்டேன் மாட்டேன்னு மண்டையக் குலுக்கி முட்டியில மூஞ்சி பொதைச்சுக் கட்டையன் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

எந்திரி மாமா. திரேகம் நல்லாருந்தப்ப மனசு அழுகிக் கெடந்த. இப்ப



திரேகம் அழுகிப்போன பெறகு மனசு நல்லாயிட்ட.

ஏண்டியம்மா! ஒனக்குக் கெடுதல் பண்ணியே கெட்டுக் கெழவனாகிப் போனேனே. இந்த நாசமாப் போன பயமேல நம்பிக்கை வச்சிருந்தியா?

நம்புனேன் மாமா. நீ என்னைக்கும் எனக்குப் புருசனாக முடியாது. ஆனா என்னைக்காச்சும் மனுசனாக முடியும்ன்னு நம்புனேன் மாமா.

ரெண்டு கையும் கோர்த்து அவன அள்ளித் தூக்குனா. அவன் கையெழுத்துக் கும்புட்டான். அவ புடிய விட்டு வழுகி வழுகி ஒழுகுனான். ஒழுகி விழுந்தவன ஒண்ணு சேத்துத் தூக்குனா.

நிக்கத் தம்பாயமில்லாமப் போனவனத் தாங்கி நிறுத்துனா; அவுந்த வேட்டியக் கட்டிவிட்டா. அவன் கையத் தன் தோள்ல போட்டு, தன்கைய அவன் இடுப்புல போட்டுப் பொடி நடையாக் கூட்டிட்டுப் போறா.

ஊதக் காத்து அடிச்சுக் கிட்டேயிருக்கு; ஒறக்குன ஊரு ஒறங்கிக்கிட்டேயிருக்கு. ஒரு நாயும் குலைக்கல; ஒரு சத்தமும் கேக்கல. இந்த ரெண்டு சீவனும் போறத பூமியில யாரும் பாக்கல. ஊனப்பட்ட நிலா மட்டும் உச்சி யிலருந்து பாத்து சந்தோசத்துல ஒரு கீத்து வளர்ந்து மேகத்துக்குள்ள ஓடி ஒளிஞ்சு போச்சு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தும் சட்டவிரோத வாகனங்களை மீட்குமாறு அதிரடி உத்தரவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தும் சட்டவி ரோத வாகனங்களை மீட்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ உரிமை எதுவுமின்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரகள் அரச வாகனங்களை பயன்படுத்தினால் அவற்றை மீட்குமாறு ஜனாதிபதி செயலகம் உத்தரவிட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக அரச வாகனங்கள் மூன்றினை வாடகை அடிப்படையில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் மட்டுமே பயன்படுத்த முடியும்.

எனினும், ஆளும் மற்றும் எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தொடர்ந்தும் அரசாங்க வாகனங்களை பயன்படுத்தி வருகின்றனர் என தேர்தல் திணைக்களத்திற்கும், ஜனாதிபதி செயலகத்திற்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சில முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாடகை அடிப்படையில் அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

எனினும் வாடகை அடிப்படையிலும் அரச வாகனங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்த சட்டத்தில் இடமில்லை எனவும் அவற்றை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் தேர்தல் ஆணையாளர், அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிய வாடகைகளை மீளளிப் பதற்கு ஏதேனும் வழிமுறை ஒன்றை உருவாக குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் பிரதான அரசியல் கட்சியொன்றின் சார்பில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நான்கு வாகனங்களை பயன்படுத்தி வருகின்றார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## சுஜீவ சேனசிங்க என்பவர் ஒரு அரசியல் சந்தர்ப்பவாதி

### நிதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, புளுமெண்டல் பிரதேசத்தில் கடந்த வெள்ளிகிழமை மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் பாதாளக் குழுக்கள் இடையிலான மோதலாக சித்திரிப்பதற்கு எதிர்க் கட்சியில் மாத்திரமின்றி தங்கள் கட்சியிலும் சுஜீவ சேனசிங்க போன்ற அரசியல் சந்தர்ப்பவாதிகள் முயற்சிப்பதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகமொன் றுக்கு வழங்கிய செவ்வி யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர், அப்பாவி சம்பத் எப்படி ஆமி சம்பத் ஆகினார்? இது பாதாளக் குழுக்களுக் கிடையிலான மோதல் என்று கூறுபவர்கள் பாதாளக் குழுக்கள் எங்கு உள்ளதென பொலிஸாரை அழைத்து விசாரணை மேற்கொள்ள வேணடும். புளுமெண்டல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தொடர்பில்லை எனவும், அது பாதாளக் குழுக்களுக்கு இடையிலான மோதல் என பிரதி அமைச்சர் சுஜீவசேன சிங்க வெளியிட்ட கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் நிதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்

பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் கருத்திற் கமைய அவர் ஒரு அரசியல் சந்தர்ப்பவாதி என நிதி அமைச் சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை குறித்த துப்பாக்கி பிரயோக சம்பவத் துடன் முன்னணியின் மகிந்த தரப்பினருக்கு தொடர்பிருப்பதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மீண்டும் குறறம் சுமத்தியுள்ளார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## இஞ்சி

Botanical Name: Zingiber officinale
Family: Zingiberaceae
Engl: Ginger
Sinh: Inguru



தேனில், இஞ்சியைக் கீற்றுக் கீற்றாக கீறிவிட்டு அது நன்றாய் ஊதிய பின்பு அதை மனத் திடத்துடன் கல்ப முறைப்படி உண்ணுதல் நல்லது. அங்ஙனம் உண்டால் நரை, திரை, மூப்புகளற்று வாழலாம்.

இஞ்சியை தோல் நீக்கி பக்குவப்படுத்தி தேனில் ஊறவைத்து தினந்தோறும் கல்ப முறைப்படி உட்கொண்டால் நரை, திரை, மூப்பு இன்றி நீண்டநாள் இருப்பதுடன் தேகமும் அழகு பெறும். மனோ பலம் உண்டாகும்.

### பத்திய உணவு

நெற் பொரிமாவுடன் பசுவின் நெய் சமன் கலந்து ஆகாரத்திற்குப் பதிலாக உண்ண வேண்டும்.

இஞ்சியானது பூக்கும் ஒரு வித்திலை தாவரமாகும். பல்லாண்டு வாழும் செடியாயினும் ஓராண்டில் இஞ்சிக்கிழங்கு முற்றி விடுவதால் தரையின் மேல் வரும் தண்டும் இலைகளும் காய்ந்து விடும். ஆகவே இது ஓராண்டுச் செடியாகும்.

இஞ்சியின மேல் தோலை நீக்கிய பின் கல்சியம் சல்பேற் அல்லது கல்சியம் காபனேற் இடப்பட்டு உலர்ந்த பின் கிடைப்பது சுக்கு அல்லது வேர்க்கொம்பு எனப்படும். இஞ்சி, சுக்கு இரண்டுமே மருத்துவ குணம்மிக்கவை.

இஞ்சியை தோல் நீக்கி சீவி இடித்து சாறு பிழிந்து 750 மில்லி அளவு எடுத்து 500கிராம் சீனியை சிறிது நீரில் கலந்து அதில் மேற்கண்ட இஞ்சிச்சாற்றைக் கலந்து அடுப்பில் வைத்து சர்பத் பதமாகக் காய்ச்சி எடுக்க வேண்டும். அதில் ஒரு தேக்கரண்டியளவு குழந்தைகளுக்கும் மூன்று தேக்கரண்டி பெரியவர்களுக்கும் கொடுக்க சீரணசக்தி பசி ஏற்பட்டு வாய்வு கலையும்.

இதேபோல் சீனிக்குப் பதில் பனை வெல்லம் எனும் கருப்பட்டியைச் சேர்த்து அல்வா போல கிண்டி எடுத்து ஆறியதும் வில்லைகளாக நறுக்கி வைத்து கொண்டு பயன்படுத்தினாலும் மேற்கூறிய பயன்களைத் தரும்.

இஞ்சியை தோல் சீவி பசும் பால் விட்டரைத்து 2 கிராம் அளவு 8 மில்லி பசுவின் பாலில் (காய்ச்சிய) கலந்துண்ண வயிற்றுப்புண், குடல் அழற்சி வாய்வு குணமாகும்.

நீரிழிவு நோயாளிகள் தினமும் இஞ்சிச்சாறு 5மில்லி லீற்றர் அருந்த நாவறட்சி, உடல் களைப்பு நீங்கும்.

இஞ்சியை தோல் நீக்கி வாயில் போட்டுமென்று உமிழ்நீரைத் துப்ப தொண்டைப் புண், குரற்கம் மல் இவைகள் குணமாகும்.

செரியாக் கழிச்சலுக்கு இஞ்சிச்சாற்றை தொப்புளைச் சுற்றி தடவலாம்.

இஞ்சிச்சாறு 10மில்லி லீற்றர், வெங்காயச்சாறு 10மில்லி லீற்றர் கலந்துண்ண வாந்தி, ஓங்காளம் நீங்கும். இஞ்சிச்சாறு ஒரு மேசைக்கரண்டி, எலுமிச்சம்பழச்சாறு ஒரு மேசைக்கரண்டி, ஈர வெந்தயச் சாறு ஒரு மேசைக்கரண்டி இம்மூன்றையும் கலந்து காலை, மாலை 3 நாட்கள் அருந்த ஆஸ்துமா குணமாகும்.

இஞ்சியின் மேலுள்ள தோலை நீக்கிவிட்டுச் சுத்தம் செய்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி 200 கிராம் இஞ்சியை 300 கிராம் தேனில் ஊற வைக்க வேண்டும். 2 வாரம் ஊறிய பின்பு ஒரு தேக்கரண்டி அளவு காலை, மாலை சாப்பிட அஜீரணம், பசி, மந்தம், மலச்சிக்கல் இவை நீங்கி இரத்தம் சுத்தமாகும். வாய்வுக் கோளாறுகள் நீங்கும். பற்களும் உறுதியளிக்கும், கண்களின் பார்வை தெளிவுறும்.

இஞ்சியை தோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உப்புடன் கலந்து ஊறப் போட வேண்டும். நாள்தோறும் குலுக்கி குலுக்கி வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். ஒன்றாக ஊறிய பின்பு தினசரி ஊறுகாய்போல் உணவுடன் சில துண்டுகளை சாப்பிடலாம். இதனால் வாத, பித்த, கப நோய்கள் வராமல் பாதுகாக்கலாம்.

### இஞ்சித் தேனூறல்

இஞ்சிச்சாறு, தேன் சேர்த்து தேன்போல் பாகுசெய்து குங்குமப்பூ, ஏலம், சாதிக்காய், கராம்பு இவற்றை பொடி செய்து தூவிக் கிளறி எடுத்து நன்றாக சுத்தம் செய்த பீங்கான் போத்தலில் சேகரித்து ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட வயிற்றுப் பொருமல், வாந்தி, குடல்நோய் ஆகியன நீங்கும்.

இஞ்சியை தோல் சீவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி நெய்யில் பொரித்தெடுத்து உலர்த்தி பொடித்து போத்தலில் போட்டு வைத்துக் கொள்ளவேண்டும். சமிபாடின்மை, சுவையின்மை, வயிற்றுப் பொருமல், ஓங்காளம் போன்றவற்றிற்று 4 கிராம் அளவு வெந்நீரில் எடுக்க நல்ல குணம் கிடைக்கும். சாதாரணமாகவே வீட்டில் நாம் தயாரித்து வைத்து பயன்படுத்தக்கூடியதொன்றாகும்.

"காலையில் இஞ்சி கடும்பகல் சுக்கு மாலையில் கடுக்காய்" கொள்ள மனிதர்கள் நூற்றாண்டு காலம் வாழலாம் என்பது பழமொழியாகும். மட்டுமன்றி அனுபவபூர்வமாக அறிந்து கொள்ளப்பட்ட உண்மை.

ஜீவ சத்துக்கள் சிதைக்கப்படாமல், இரசாயனங்கள் கலக்கப்படாமல் கிடைக்கும் வெல்லத்துடன் ஆயுளைக் கூட்டவும் பித்தத்தை தணிக்கவும் இளநரையை இல்லாமல் செய்யவும் இஞ்சியும் பசுவின் பாலும் கலந்து பருகுதலே சிறப்பு. இது காலை அருந்த வேண்டிய பானமாகும்.

இஞ்சியை ஏலக்காயுடன் சேர்த்து அரைத்து விழுதாக்கி 2 கிராம் அளவு தினமும் சாப்பிட்டு வந்தால் பசி எடுக்கும்.

இஞ்சிச்சாறு, வெங்காயச்சாறு, தேன் மூன்றையும் சமஅளவு கலந்து குடித்தால் இருமல், சளி போன்றவை குணமாகும்.

இஞ்சிச்சாற்றில் நாவல் விதைப் பருப்புக்களை ஊற வைத்து சாறு சுவறி உலர்ந்ததும் பொடித்து 2 கிராம் அளவு சாப்பிட்டுவர நீரிழிவு குணமாகும்.

புதினாக் கீரையுடன் இஞ்சி சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டு வந்தால் அஜீரணம், பித்தம் குணமாகும்.

இஞ்சிச்சாற்றில் வெல்லம் கலந்து குடித்தால் வாதநோய்கள் குணமாகும்.

இஞ்சியை கொத்தமல்லி சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டால் வயிறு இரைச்சல் குணமாகும்.

இஞ்சியைத் தோல் நீக்கி தண்ணீரில் போட்டுக்காய்ச்சி அதில் பால் (2கப்), ஏலக்காய் பொடி, சிறிது குங்குமப்பூ, கற்கண்டு ஆகியவற்றை கலந்து குடித்தால் உடல் வனப்புப் பெறும். இளமையும் திரும்பும்.

### இஞ்சி ஊறுகாய்

தோல் நீக்கிய 500 கிராம் இஞ்சியை சேகரித்து சிறு துண்டுகளாக நறுக்கி 500 மில்லி எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு நன்றாக ஊற விடவேண்டும். 100கிராம் பச்சை மிளகாய் தொடர்பு நீக்கா மல் வகிர்ந்து போட்டு 3 தேக்கர ண்டி உப்பையும் கலந்து பாத்தி ரத்தை மெல்லிய சுத்தமான வெள்ளைத் துணியால் மூடி வேடுகட்டி வெயிலில் வைக்க வேண்டும். இவ்வாறே 3நாட்கள் வெயிலில் வைத்து எடுத்து சிறிது கடுகைத் தாளித்து இஞ்சிக் கலவையில் கொட்டிக் கிளற வேண்டும். உணவோடு இந்த ஊறுகாயை சேர்த்து கொள்ள பசி, மந்தம், அஜீரணம், வயிற்றுப் பொருமல், வாய்வு ஆகியவை முற்றாக நீங்கும்.

### இஞ்சி லேகியம்

வயிறு தொடர்பான பிணிகளை குணப்படுத்த இஞ்சி லேகியம் சிறந்தது. இதனை எந்தச் சிரமமும் இல்லாமல் வீட்டிலேயே தயாரித்து கொள்ளலாம். 1/2லீற்றர் அளவு இஞ்சிச்சாறு எடுத்து பசுவின் பாலில் அவித்து எடுத்து 15 கிராம் வெள்ளைப் பூண்டை நசுக்கி அச்சாற்றில் போடவும். பின்பு மிளகு, சீரகம், ஓமம், வெந்தயம் ஒவ்வொன்றும் 15 கிராம் எடுத்துக்கொள்ள வேண்டும். வெந்தயத்தை கழுவிக் காயவைத்து மற்ற மருந்துச் சரக்குகளோடு சேர்த்து இடித்து கொள்ள வேண்டும். அதிமதுரம் 15 கிராம், ஏலரிசி 15 கிராம் இடித்து சேர்த்துக் கொள்ளவேண்டும். அத்துடன் 500 கிராம் பனைவெல்லம் சேர்த்து அடுப்பேற்ற வேண்டும். 150 மில்லி லீற்றர் பசுவின் பாலை ஊற்றி இளகியதும் இஞ்சிச்சாற்றை ஊற்றிக்கிளறவும். லேகிய பக்குவத்திற்கு வந்ததும் 150கிராம் நெய்விட்டு கிளறி எடுத்து பத்திரப்படுத்தவும். 5 கிராம் அளவு காலை, மாலை சாப்பிட்டுவர வயிறு தொடர்பான எல்லாக் குறைபாடுகளும் துரிதமாகக் குணமாகும்.

மருத்துவ நோக்கிலும் சமையலிலும் இஞ்சிக்கு சிறப்பான இடமுண்டு. இஞ்சி கார்புச் சுவையும் குருத்தன்மையும் வறட்சியும் உஷ்ண வீரியமுள்ளதாகும். உண்டபின் ஜடராக்கினியுடன் (சமிபாட்டுக்கு தேவையான அக்னி) சேர்ந்து பக்குவமடையும் போது இனிப்புச்சுவை கொள்ளும். ஜடராக்கினியை வளர்க்கும், மலத்தை இளக்கும், கபத்தையும் வாதத்தையும் தணிக்கும், இரத்தத்தை சுத்திகரிக்கும், உணவுகளுக்கு வாசனையூட்டுவதற்குக் கூட இஞ்சியை பயன்படுத்தலாம். உணவுடன் சேர்த்தே இஞ்சியை எடுக்கும்போது எத்தனையோ நோய்களின் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவைப் புறக்கணித்து மகிந்த செயற்படவேயில்லை

**அனுர பிரியதர்சன யாப்பா விளக்கம்**

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்தியாவைப் புறக்கணித்து செயற்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் அனுர பிரியதர்சன யாப்பா நிராகரித்துள்ளார்.**

த ஹிந்து நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எப்படி இந்தியாவைப் புறக்கணிக்க முடியும்? உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பெரும்பாலானவை இலங்கைக்கு இறக்குமதிகள் இந்தியாவில் இருந்து தான் மேற்கொள்ளப்படுகிறது.

பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். பெருமளவு இந்திய நிறுவனங்கள் இங்கு செயற்படுகின்றன. பிரதம நிறைவேற்று அதிகாரிகளாக இந்தியர்கள் உளளனர்.

எமது நாட்டைத் துரிதமாக அபிவிருத்தி செய்வது பற்றியே நாம் சிந்தித்தோம். அபிவிருத்தியை வேகப்படுத்துவதே எமது தேவையாக இருந்தது. இதனால் தான் சீனாவின் பங்கு நாடப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அணி சேரா கொள்கையே பின்பற்றப்பட்டது. எவருக்கு எதிராகவும் எவருடனும் அணி சேருவதில்லை என்ற கொள்கையே முன்னைய அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது.

அதே கொள்கையையே மீண்டும் மீண்டும் நாம் பின்பற்றுவோம்.

இந்தியாவுடன் உள்ளதைப் போலவே, சீனாவுக்கும இலங்கைக்கும் இடையில் வரலாற்று ரீதியான உறவுகள இருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி வந்த பேருந்து விபத்து

கொழும்பு - கண்டி பிரதான வீதி நிட்டம்புவ பிரதேசத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழப்பாணம் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று, குருநாகலில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதினாலே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

இவ்விபத்து நேற்றுக் காலை 7.15 மணியளவில் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த 11 பேர் வத்துபிட்ட பவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சஜின்வாஸ் குணவர்த்தனவிற்கு 11-ம் திகதி வரை விளக்கமறியல்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சஜின்வாஸ் குணவர்த்தனவின் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கோட்டை நீதவான் பிரியந்த லியனகே இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாக சஜின்வாஸ் மீது குற்றம்சாட்டப்பட்டது.

சந்தேக நபருக்கு பிணை வழங்குமாறு அவரது சட்டதரணி நீதிமன்றில் கோரியுள்ளார். எனினும் அவரது கோரிக்கையை கோட்டை நீதவான் நிராகரித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 200 | 200 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 100 | 70 |
| கரட் | 100 | 160 | 200 | 120 |
| பூசணி | 60 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 30 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 40 | 30 | 40 | 40 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 160 | 150 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 60 | 120 | 120 | 120 |
| போஞ்சி | 180 | 140 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 50 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 200 | 120 | - | 120 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 200 | 160 |
| முள்ளங்கி | 40 | 30 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 453

சுஜன் செல்வகுமார்


கஷ்டம் வரும்போது
கண்ணை மூடாதே
அது உன்னை
கொன்று விடும்.கண்ணை
திறந்து பார்.அதை
வென்று விடலாம்.

-அப்துல் கலாம்-

கிரி கிரி




சிவா கணேஸ்





ரோய் வாமன்



நல்ல
பாடலா
பார்த்து
டவுண்லோட்
செய்யனும்


அன்ரோ மெரினா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த விஞ்ஞானி, தலைவர் அப்துல் கலாம்











மறைந்த தலைவர், விஞ்ஞானி அப்துல் கலாம் அவர்களை நினைத்து இந்திய மக்கள் பிரார்த்திக்கின்ற இவ்வேளையில் அவரது வாழ்க்கையோட்டத்தை பார்க்க வேண்டிய தேவையுள்ளது.

இவர் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் எனும் கடலோரக் கிராமத்தில் 1931 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் ஜெயினுலாப்தீன், தயார் பெயர் ஆஷியம்மா. இவரது ஊரிலே S.D.R மாணிக்கம் என்பவரது வீட்டிலே இருந்த அருமையான நூலகம் அவர் வாசிப்பு பழக்கத்தை தூண்டியது. இந்நூலகத்திலே பாரதியார் பாடல்கள், பகவத் கீதை, திருக்குறள் போன்றன பல நூல்களைப் பெற்றுப் படித்தார்.

தனது கிராமத்திலேயுள்ள ஆரம்பப் பாடசாலையில் கற்றபோது சிவசுப்பிரமண்ணிய ஐயர் எனும் நல்லதொரு அறிவியல் ஆசான் வாய்க்கப் பெற்றார். அவரே நகர்ப்புறம் சென்று தொடர்ந்து கற்குமாறு தூண்டினார். இதனால் இராமநாதபுரம் சுவாட்ஸ் உயர் நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை கற்றார். அங்கு அப்பாத்துரை சொலமன் எனும் நல்ல ஆசிரியர் வாய்க்கப் பெற்றார். அவரின் வழி காட்டலில் திருச்சி புனித ஆசையப்பர் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்று 1954 இல் பௌதீகவியல் இளங்கலைப்பட்டம் பெற்றார்.

பின்னர் தென்னிந்தியாவிலேயே சிறந்த பொறியியல் கல்லூரியான சென்னை குரோம்பேட்டையில் அமைந்துள்ள சென்னை தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் சேர்ந்தார். அவரது அன்புச் சகோதரி சஹாராவின் உதவியினால் விமானப் பொறியியல் கற்கை நெறியை மேற்கொண்டார். "காற்றில் ஏறி விண்ணையும் சாடுவோம்" என்ற பாரதியாரின் பாடல், "பறவையைக் கண்டான், விமானம் படைத்தான்" என்ற கவியரசின் பாடல் என்பன இவருக்கு ஊக்கமளித்தன.

டாக்டர் ஈ.ஸ்பாண்டர், கே.ஏ.வி.பண்டலை, பேராசிரியர் நரசிம்மம் போன்ற முத்தான மூன்று பேராசிரியர்களும் வாய்க்கப் பெற்றமை இவரின் வெற்றிக்கு காரணமாக அமைந்தது.

தனது கற்கை நெறிக்காக இவர் மேற்கொண்ட செயற்திட்டம் தாழ்ந்து பறக்கும் ஒரு அதிரடி விமானம் ஒன்றை வடிவமைப்பதாகவே இருந்தது. இவர் படிக்கும்போது ஆனந்த விகடனில் எழுதிய 'ஆகாய விமானம் கட்டுவோம்' என்றகட்டுரை அனைவரதும் பாராட்டையும் பெற்றது. இதனால் விகடன் ஆசிரியர் இவரை அழைத்து பரிசிலும் வழங்கினார். 1957 ஆம் ஆண்டு விமானப் பொறியியலில் பரப்பு னோமாப் பட்டமும் பெற்றார் கலாம்.

இதன் பிறகு வேலையொன்றைப் பெறுவதற்காக முயற்சித்தார். இந்திய விமானப் படையில் வேலைக்காக விண்ணப்பித்து நேர்முகத் தேர்விற்கு சென்றார். ஆனால் எட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கான தெரிவுப் பட்டியலில் இவர் ஒன்பதாவது இடத்தில் இருந்தபடியால்வாய்ப்பை இழந்தார். இருந்தும் விமானத் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் உற்பத்தி இயக்க நிறுவனத்தில் முது அறிவியல் ஆய்வு உதவியாளர் பதவி கிடைத்தது. இதனூடாக விமானப் பராமரிப்புப் பயிற்சி பெற தொழில்நுட்ப நகரமான கான்பூர் சென்றார். பின்னர் பெங்களூர் விமான அபிவிருத்தி ஸ்தாபனத்திற்கு மாற்றப்பட்ட கலாம் நில உபகரண இயந்திரம் ஒன்றை உருவாக்கினார்.

இவ்வாறாக ஆய்வு, பயிற்சி, புத்தாக்கங்களில் ஈடுபட்ட அப்துல் கலாம், பேராசிரியர் விக்கிரம் சாராபாய் தலைமையிலான இந்திய தேசிய அறிவியல் கழகத்தின் கீழுள்ள இந்திய தேசிய விண்வெளி ஆய்வுக்குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டார். இதன்படி டா [illegible] படை ஆய்வு நிறுவனத்தில் பயிற்சி பெற்றார்.

கேரளா மேற்குக் கரையோரம் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள தும்பா எனும் அழகிய கிராமத்தில் நிறுவப்பட்ட விண்வெளி ஆய்வு மையத்தில் வேலை செய்தார். 1963 ஆம் ஆண்டு நாசா ஆய்வு நிறுவனத்தில் ஆறுமாதப் பயிற்சிக்காக அமெரிக்கா சென்றார் டாக்டர் கலாம். இவ்வாறாகப் பயிற்றப்பட்ட கலாமிடம் செயற்கைக்கோள் வடிவமைப்பு, ஏவுகலன் தயாரிப்பு தொடர்பான முக்கிய பொறுப்புகள் ஒப்படைக்கப் பட்டன. [illegible] திட்டத்தில் நான் [illegible] பொறியை உருவாக்கும்பொறுப்பை கலாம் ஏற்றார். அத்துடன் குழுவுக்கு பொறுப்பாக இருந்தார்.

பேராசிரியர் விக்கிரம் சாராபாய் மேற்படி திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக மதிப்பிடுவதற்காக வருகை தந்தார். அப்பொழுது கலாம் குழு உறுப்பினர்களை தமது கட்ட உருவாக்கங்களை முன்வைக்குமாறு வேண்டினார். இதனை அவதானித்த சாராபாய், கலாமின் திட்டமுகாமைத்துவம், அணித்தலைமைத்துவத்தைப் பாராட்டினார்.

S.L. V-3 திட்டம் முதலில் தோல்வியடைந்த போது கலாம் கவலையில் மூழ்கினார்.

இரண்டாம் பரிசோதனையில் வெற்றியடைந்த போது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மட்டுமல்ல, பிரான்ஸ், ஜேர்மன், அமெரிக்கா, ஜப்பான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்கள் வாழ்த்துக்களை அனுப்பின. 1989 மே மாதம் 23 இல் அக்கினி ஏவுகணை வெற்றியளித்தது.



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் பேராசிரியர் சதீஷ் தவான், விக்கிரம் சாராபாய் விண்வெளி ஆய்வு நிறுவன இயக்குநர் பிரம்மப் பிரகாஷ் போன்றோர்களுடன் இணைந்து செயற்பட்டார்.

ஒருமுறை இயக்குநர் டாக்டர் பிரம்மப் பிரகாஷ் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றபோது பொருளாதார சுதந்திரம், அதிகாரம் பற்றிக் காரசாரமாக குறிப்பிட்டார். இது அனைவரை யும் சிந்திக்க வைத்தது.

இவ்வாறாக இந்தியாவின் பரந்த, அதிகார, அறிவியல்படி முறைத் தளத்தில் சாதனைகள் படைத்த அப்துல் கலாமிற்கு பல் கலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தன. "**பாரத ரத்னா**" என்ற இந்திய உயர் விருதைப் பெற்றார்.

டாக்டர் கலாம் 2002 ஜூலை 25 ஆம் திகதி இந்திய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்து தத்துவஞானி பேட்டன்ரவுல் ஒருமுறை "**நாம் வானத்தின் ரம்மியங்களை மேலே பார்த்து வியந்து கொண்டிருக்க, பூமியிலுள்ள மக்களின் பிரச்சினைகளோ எம்மை கீழே பார்க்க வைக்கின்றன**" எனக் கூறினார்.

இவ்வாறே நீண்டகாலம் விண்வெளியை பார்த்து ரசித்து, ஆய்வு செய்த கலாம் கோடானு கோடி இந்திய மக்களின் வறுமையைப் பார்த்து மனம் நொந்தார். இதனால் மதசார்ப்பற்ற சிந்தனையாளரான ஜனாதிபதி கலாம் இந்தியாவின் முதல் எதிரியான வறுமையை ஒழித்து, பலமான தாய்நாட்டை 2020 இற்குள் அடைவதே அவரது தூரநோக்காகவிருந்தது. அதற்காக பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனைகள், செயல் திட்டங்களை வழங்கினார். இவர் எழுதிய "**அக்கினி சிறகுகள், இந்தியா 2020**" ஆகிய நூல்கள் முக்கியமானவை.

ஜனாதிபதி பதவிக்காலம் முடிவுற்றதும் உயர் நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என்பனவற்றில் மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடி, கேள்விகள் கேட்டு அறிவியல், மெய்யியல் சிந்தனைகளைத் தூண்டினார்.

அவர் அண்மையில் இலங்கை வந்தபோது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, மொறட்டுவப் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களில் ஆற்றிய உரைகள் மறக்க முடியாதவை. இவ்வாறான தனித்துவமான மனிதனின் கனவுகள், கருத்துக்கள் நிறைவேற பிரார்த்திப்போமாக!

பி.முத்துலிங்கம்
ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக்கோஷ்டிக்கும் ஐ.தே.கவுக்கும் தொடர்பில்லை

## ஊடகத்துறை அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

**பாதாள உலக கோஷ்டிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. நல்லாட்சியின் மீது விருப்பம் கொள்ளாதவர்களின் சதித் திட்டமே புளுமெண்டல் சம்பவமாகும். இது தொடர்பில் பொலிஸார் விரைவில் இரகசியங்களை வெளிப்படுத்துவார்கள் என ஊடகத்துறை அமைச்சரும் காலி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.**

எமது கொள்கை என்றைக்கும் மாற்றம் அடையாது. நல்லாட்சியை பலப்படுத்தும் வகையில் தேர்தலை நீதியான முறையில நடத்தி காண்பிப்போம். சுமார் 10 வருடங்களாக ஜனாதிபதியாக பதவி வகித்து செய்ய முடியாத காரியங்களை எவ்வாறு குருநாகல் மாவட்டத்தின் சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக மகிந்த செய்யப்போகின்றார் என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

10 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்து மக்களுக்கு எந்தவொரு நிவாரணத்தையும் வழங்கவில்லை. நாட்டின் அனைத்து அபிவிருத்தி திட்டங்களினூடாகவும் மோசடிகள் செய்யப்பட்டன. மக்கள் உணரும் படியான எந்தவொரு பணிகளும் செய்யப்படவில்லை.

எனவே பத்து வருடங்களாக தன்னுடைய குடும்பத்தின் வளர்ச்சியை மாத்திரம் கருத்திற் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டார். எனினும் சாதாரண மக்கள் தொடர்பில் நிவாரண திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவில்லை. நிவாரண திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அதனூடாகவும் மோசடிகள் செய்யப்பட்டன.

எனவே முன்னாள் ஜனாதிபதி தன்னுடைய ஆட்சியின் போதே போற்றும் படியான எந்தவொரு நிவாரண திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆகவே சுமார் பத்து வருடங்களாக நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியாக இருந்து கொண்டு செய்யாத சேவைகளை குருநாகல் மாவட்டத்தின் சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக வந்து எவ்வாறு செய்யப்போகிறார். நகைச்சுவை பாங்கான முறையில் கொள்கை பிரகடனங்களை தயார் செய்துள்ளனர்.

ஆகவே இவ்வாறான கொள்கை பிரகடனங்களைக் கொண்டு மக்களை ஏமாற்ற முடியாது. தற்போது நாட்டு மக்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் அணித்திரண்டுள்ளனர்.

இதேவேளை நல்லாட்சிக்கு பலம் சேர்க்கும் வகையில் நீதியானதாகவும் அமைதியானதாகவும் தேரதல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே இம்முறை பாராளுமன்ற தேர்தலை நல்லாட்சியை பலப்படுத்தும் செயற்றிட்டத்தின் முன்மாதிரியான தேர்தலாக மாற்றியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தா. (இ-7)

# நெடுஞ்சாலைக்கான அடிக்கல் பிரதமர் ரணிலால் நாட்டி வைப்பு



சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 540 பில்லியன் ரூபா நிதி செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கான அடிக்கல் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நடப்பட்டது.

நேற்று முன்தினம் முற்பகல் சுபவேளையில் கடவத்தைக்கு விஜயம் செய்த பிரதமர் மேற்படி அதிவேக நெடுஞ்சாலைக்கான நிர்மாணப் பணிகளை பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தார். இப்பாதை கடவத்தையிலிருந்து தம்புள்ளை வரை நிர்மாணிக்கப்படவுள்ளது.

இலங்கைக்கான சீனத்தூதுவர் ஷியான் லியாங், அமைச்சர்கள் கபீர் ஹாசிம், ஜோன் அமரதுங்க, ரவி கருணாநாயக்க, லக்ஷ்மன் கிரியெல்ல, இரான் விக்ரமரத்ன உட்பட அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள், துறை சார்ந்த நிபுணர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேற்படி நெடுஞ்சாலை மூன்று கட்டங்களாக நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் கடவத்தையிலிருந்து நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதலாவது கட்டம் கடவத்தை - கோசின்னவுக்கிடையிலான 4.5 கிலோ மீற்றர் பாதை, கோசின்னவிலிருந்து மீரிகமை வரைக்குமான 3[illegible] கிலோ மீற்றர் பாதை, மீரிகம[illegible] குருநாகல் வரைக்குமான 39.7 கிலோ மீற்றர் பாதை, அம்பேபுஸ்ஸவில் 9.3 கிலோ மீற்றரில் தொடர்புப் பாதை வரை தொடரவுள்ளது.

இரண்டாம் மூன்றாம் கட்டங்களில் பொதுஹெர கலகெதர வரையிலான 32.5 கிலோ மீற்றர் பாதை, குருநாகல் - ரிதிகம வரையிலான 12.5 கிலோ மீற்றர் பாதை, ரிதிகம - மெல்சிரிபுர வரையிலான 18.9 கிலோ மீற்றர் பாதை, மெல்சிரிபுர - கலேவெல வரையிலான 16.2 கிலோ மீற்றர் பாதை, கலேவெல தம்புள்ளை வரையிலான 'ஏ-9' 12.7 கிலோ மீற்றர்[illegible] நிர்மாணிக்கப்படவுள்ளன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நரியின் தந்திரம்

ஓர் ஊரிலே காடு இருந்தது. அந்தக் காட்டில் சிங்கம் ஒன்று காட்டுத்தலைவனாக ஆட்சி புரிந்து வந்தது.

மற்றைய எல்லா விலங்குகளும் அந்தச் சிங்கத்தின் சொற்படி கேட்டு நடப்பது வழமை போல இருந்தது.

அந்தச் சிங்கத்தை எதிர்த்தும் பேசுகிற துணிச்சல் வேறுயாருக்கும் இல்லை. அந்தச் சிங்கத்திற்கு நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம்.

நரித்தந்திரம் என்று சொல்லுகிறார்கள்... அது எப்படி இருக்கும்?

இதைக் கண்டுபிடிக்க என்ன செய்யலாம்? யோசனை செய்து கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

அதன்படி - காட்டில் உள்ள எல்லா விலங்குகளையும் வரவழைத்து ஒரு கூட்டம் கூடியது. ஒரு பெரிய திடலில் எல்லா விலங்குகளும் உட்கார்ந்திருந்தன.

எதிரே உள்ள ஒரு மேடையில் சிங்கம் உட்கார்ந்திருந்து பேச ஆரம்பித்தது.

"நண்பர்களே... இப்போது நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீங்கள் எல்லோரும் பதில் சொல்ல வேண்டும்!" அப்படி என்று கூறியது.

என்ன கேள்வி கேட்கப் போகிறாரோ தெரியவில்லையே என்ற பயம் எல்லா விலங்குகளுக்கும் ஏற்பட்டது. ஏதாவது பிழையாகப் பதிலளித்தால் சிங்கத்திற்கு கோபம் வந்து விடும். அதன் பின் என்ன நடக்குமென்று யாராலேயும் சொல்ல முடியாது. எல்லா விலங்குகளும் சிங்கம் தெரிவிக்கப்போவதை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தன.

ஒரு சின்ன எலியைப் பிடித்தது... அதைத் தன்னுடைய உள்ளங்கையில் வைத்து உயர்த்திக் காட்டி 'இது என்ன சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்றது.

முதலில் ஒரு காட்டுப் பூனை எழுந்து "இது எலி" என்று பதிலளித்தது.

அதன் பின் குரங்கு "இது எலி" என்று சொல்லிவிட்டுப் போய் உட்கார்ந்தது.

அதனைத் தொடர்ந்து ஒரு கரடி வந்து "இது எலி" என்றது.

கடைசியாக வந்த நரி மட்டும் கொஞ்சம் வித்தியாசமாகப் பதில் கூறியது.

"இது எலி" என்று சொல்லவில்லை.

"இதை... எலி என்று சொல்கிறார்கள்!" அப்படி என்றது. அதாவது நரி மனதினுள் என்ன நினைத்தது தெரியுமா?

இது எலி என்பது சிங்கத்திற்கு தெரியாமலா இருக்கும்? அப்படியிருக்கும் போது சிங்கம் எதற்காக இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறதோ... தெரியவில்லை... இந்த வலைக்குள் நான் ஏன் மாட்டிக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் இப்படி சொல்கிறார்கள் என்று நான் சொல்லிவிட்டால் என்மேலே எந்தப் பிழையும் கண்டுபிடிக்க முடியாது... இதுதான் நரியின் யோசனை.

இருந்தாலும் அந்தச் சிங்கம் நரியை விட்டு வைப்பதாக இல்லை. மறுபடியும் அந்த நரியை அழைத்தது.

இதோ... பார் நரியே... இவ்வளவு நாளாக நீ எலியைப் பார்த்ததே இல்லையா? இது என்ன என்பது உனக்குத் தெரியாதா? நீ தெளிவாகச் சொல்லவேண்டியதுதானே "இது எலி" அப்படி என்று. அதை விட்டுட்டு ஏதோ ஜோதிடம் சொல்வது மாதிரி சொல்கிறாயே...

சரி உனக்கு ஒரு மாதகால அவகாசம் தருகிறேன்... நீ போய் உன் இனத்தை ஒன்று சேர்த்து மற்றைய நரிகளோடு கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வா... அதன்பின் வந்து சொல்லு இது என்ன பிராணி! என்பதை அவ்வளவு தான். கூட்டம் கலைந்தது.

நரி யோசனையோடு திரும்பிப் போனது... மற்றைய நரிகளிடம் பேசியது.

நாம் எல்லோபரும் அது எலி என்று சொன்னால் என்ன ஆபத்து நேரிடுமோ தெரியவில்லையே.

ஒரு மாதம் கடந்த நிலையில் அடுத்த கட்டகூட்டம் நடந்தது.

சிங்கம் கேட்டது என்ன நரியே... என்ன முடிவு எடுத்துள்ளீர்.

ஐயா! நீங்கள் சொன்னதன் பிரகாரம் எல்லோரும் கூடி விவாதித்தோம்.

"சரி என்ன முடிவு?"

"இதை எலி என்று உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்" என்று தெளிவாகக் கூறியது.

அப்போதும் இது அதிலே தன்னைச் சம்பந்தப்படுத்தவில்லை! சிங்கத்திற்குச் சிரிப்பு வந்தது.

அதன்பின் கேட்டது... சரி... அதையெல்லாம் விடு... நீ என்ன நினைக்கிறாய்? அதைச் சொல்லு? என்று கேட்டது.

'எஜமானே! நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ அப்படித்தான் நானும் நினைக்கிறேன்!" என்றது நரி.

"சரி போய் வா!" என்று கூறியது சிங்கம். இதுதான் நரித்தந்திரம் என்பதாகும்.

இன்றைய உலகில் மனிதர்களுக்கு இந்தத் தந்திரம் அதிகமாகத் தேவைப்படுகிறது... அதுவும் அடிக்கடி தேவையாகவுள்ளது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தணியாத அதிகார வேட்கை!

**19.07.2015 அன்று சண்டே லீடர் பத்திரிகையில் தணியாத அதிகார வேட்கை எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் ....**

கடந்தவாரம் செவ்வாயன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தொலைக்காட்சிக்கு வழங்கிய தகவல் விளக்க உரையொன்றின்போது மக்களுக்கு பகிரங்கப்படுத்திய விடயங்கள் பலவும் ராஜபக்சவுடைய ஆதரவாளர்களுக்கும் விசுவாசிகளுக்கும் ஒருவித மயக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் மனக்கலக்கத்தையே உருவாக்கியிருக்கும்.

தோல்வியடைந்தமுன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவுக்கு வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில்போட்டியிடுவதற்கானவேட்புமனுவழங்கப்படுமென முன்னர் அவர் விடுத்திருந்த அறிவித்தல்ராஜபக்சவுடைய மீள வருகை குறித்து அதீத நம்பிக்கையை தோற்றுவிக்குமளவிற்கு பலரதும் ஊகங்களுக்கு காலாக அமைந்திருந்தது.

'SLFP' மற்றும் 'UPFA' இரண்டையும் அவரே பிரதமர் பதவிக்கான அபேட்சகர் என்ற ரீதியில் தலைமை தாங்கி நடத்தப் போகிறார் என்பதே அவ்விதநம்பிக்கைகளிலொன்றாக இருந்தது. கடந்தவை கடந்தவையாகவே போகட்டும் என்றளவில் சிறிசேனா- ராஜபக்ச அவர்களிருவருமே தேர்தல் பேரணிக் கூட்டங்களில் ஒரே அரசியல் பிரச்சார மேடைகளில் தோன்றுவார்கள் என்பதே மற்றுமொரு நம்பிக்கையுமாகும்.





ஆனாலும், இடம்பெறும் விடயங்கள் மட்டிலான உண்மைகளைத் தெளிவுபடுத்தும் தனது உரையில் ஜனவர் 8 ஆம் திகதியன்று பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றிக்குப் பின்னர் மகிந்த ராஜபக்சவுக்கு கட்சிக்குள் இருக்கக்கூடிய எந்தவித எதிர்கால வாய்ப்புகள், விசேஷமாக வெற்றி வாய்ப்புகள் குறித்துஎந்தவித உறுதிப்பாட்டையும்தான் அளிக்கவில்லை என்றே ஜனாதிபதி சிறிசேனா கூறினார். ராஜபக்ச விசுவாசிகள், அவருக்குயே பிரதம மந்திரி வேட்புமனு அங்கீகாரம் அளிப்பதுடன் அவரையே UPFA குழுவுக்கான தலைவராகவும், வேட்புமனு விசாரணை சபைத் தலைவராகவும் நியமிக்க வேண்டுமென கோரியிருந்தனர். சிறிசேன அவர்கள் இந்த கோரிக்கைகளனைத்தையும் நிராகரித்திருந்தபோதிலும் SLFP பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் UPFA கூட்டணியின் அனைத்துக் கட்சித் தலைவர்கள் மத்தியிலும் அக்கோரிக்கைகளுக்கே ஆதரவு வளர் ந்து கொண்டிருந்தது. ராஜபக்சவுக்குக் குரல் கொடுத்துக்கொண்டிருந்த UPFA மற்றும் SLFP பேச்சாளர்கள் அனைவருக்கும் தமது நிராகரிப்புக்கான காரணங்களை சிறிசேன் விளக்கிக் கூற வேண்டியிருந்தது. அவற்றுள் உறுதியாள ஒரு காரணம் அவர்களது வேட்பாளர்கள் மட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்கள் கவரப்படப் போவதில்லை என்பதாகும். இரண்டாவதாக ஊழல்- மோசடி மற்றும் குடும்ப ஆட்சி போன்ற குழறுபடிகளில் ஊறித் திளைத்திருந்த ராஜபக்ச ஆட்சி காரணமாக அவர்கள் பிரேகிக்கும் தலைவருக்கு இளைஞர்கள் ஆதரவளிக்கப் போவதில்லை.

வலுவான தனது காரணங்களின் நியாயப்பாடுகள் மத்தியிலும் மக்களின் அனுதாபங்கள் கிடைக்கக்கூடிய விதத்தில் நம்பிக்கைக்குரிய ஒரே சந்தர்ப்பமாக, பாராளுமன்ற உறுப்புரிமை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பாக, அதற்கான வேட்புமனுவைப் பெற்றுக் கொடுப்பதற்காக பெரும் மனப் போராட்டம், எதிர்ப்புகள், மத்தியிலே அதனை நான் அனுமதித்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக SLFP தலைவராகவும் அக்கட்சியின் உறுப்பினராகவும் 49 வருடங்கள் பணியாற்றிவரும் தனது அச்சேவையின் பொருட்டு கட்சியை பிளவுபடாது காப்பதுவுங்கூட அவரது முக்கிய நோக்கமாகவே இருந்தது. இலங்கை ஜனநாயகத்தின் இருபெரும் தூண்களாக இருந்துகொண்டிருக்கும் இரு தேசியக் கட்சிகளான UNP, SLFP என்ற இரு கட்சி ஒழுங்குமுறையின் பெறுமதி பற்றியும் பெரும் சிரமத்துடன் அவர்களுக்கு அவர் எடுத்துக்கூற வேண்டியிருந்தது. இருந்தும், UPFA மற்றும் SLFP இரண்டினதும் உறுப்பினர்கள் மத்தியில் மகிந்தவுக்கான வேட்புமனு கோரிக்கை உயர்ந்தளவில் வீறு பெற்றதாகவே காணப்பட்டது.

ஜனாதிபதி சிறிசேனவின் தேர்தல் பிரச்சார தொடரியக்கத்திற்கு அரசியல் கட்சிகள், குழுக்கள் என 49 அமைப்புக்களது ஆதரவு கிடைக்கப்பெற்றதுடன் (தற்போது 110 அமைப்புக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன) ராஜபக்ச ஆட்சியின் போது நாடு இழந்துபோயிருந்த அதனது ஜனநாயக விழுமியங்கள், கருத்தியல் கோட்பாடுப் பெறுமதி போன்றவை மீளவும் வெற்றிகரமாக நிலைகொள்ளவைக்கப்பட்டன. ஜனவரி 8 ஆம் திகதி வெற்றிக்குப் பிற்பாடு, அடுத்த நாளே ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொள்வதுடன் பாராளுமன்றத்தையும் கலைத்து விடுவதே அவரது முதன்மைச் செயற்பாடு என்தாக இருந்தது. ஆனால், அவருக்கு ஆதரவு அளித்திருந்தோர் அவரது நூறுநாள் வேலைத் திட்டம் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டுமென்பதையே விரும்பியிருந்தனர். அதன் நிறைவேற்றத்துடன் 19 ஆவது திருத்தச் சட்டம் போன்ற காத்திரமான மாற்றங்களை அவரால் மேற்கொள்ளக்கூடியதாகவிருந்தது. பாராளுமன்றம் கலைக்கப்படு முன்னரே ராஜபக்சவைப் பாராளுமன்றத்திற்கு திரும்பவும் கொண்டு வந்து புதிய அரசாங்கமொன்றை ஏற்படுத்துவதற்கான சதித்திட்டமொன்று இருப்பதாக அவருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து பாராளுமன்றை அவரே கலைத்துவிட்டார்.

மகிந்த ராஜபக்ச பாராளுமன்றத்திற்குள்ளோ அரசியலுக்குள்ளோ மீளவும் வருவதையிட்டு எதிர்ப்பதென்ற தனது கடப்பாட்டு உணர்வினை திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறியவராகவே தொலைக்காட்சிக்கான தனது நீண்ட உரையினை ஜனாதிபதி சிறிசேன முடித்துக் கொண்டார். ராஜபக்ச ஜனாதிபதிாக இருந்தபோது ஜனாதிபதி பதவிக்கு எத்தனை தடவைகள் போட்டியிடலாம் என வரும் இடத்தில் குறிப்பிடப்பட்ட அந்த எண்ணிக்கையை மாற்றியதன் மூலம் தனது வாழ்நாட் காலத்தில் மற்றுமொருவர் பதவிக்கு வர முடியாதவாறு தடுத்திருந்தார் என்பது பற்றியும் அவர் நினைவூட்டினார். தகைமை படைத்த ஏனைய மூத்த அரசியல்வாதிகள் ஜனாதிபதியாக வரக்கூடிய சந்தரப்பங்கள் மற்றவர்களுக்கு கிட்டாமல் போவதையே அவர் விரும்புவார்.

மிகவும் சுருக்கமானதொரு காலகட்டத்திற்குள்ளாகவே கருத்துச் சுதந்திரம், மனித உரிமைகள் மீள் நிலை பெறுதல் போன்ற ஜனநாயக விழுமியங்களை நாடு மீளவும் அரவணைத்துக்கொண்டது போன்ற செயற்பாடுகளுக்கு தானே காரணமென ஜனாதிபதி சிறிசேன உரிமை பாராட்டுவது மறுக்கக் கூடியதல்ல. தமிழர் முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மை சமூக மக்கள் இன்று கூடுதல் சுதந்திரமாகச்செயற்படுவதற்கு பத்திரிகையாளர் நேரடியாகவே உண்மைகளை பயமின்றி எதிர்கொள்ளக்கூடியதாக இருப்பது போன்றவற்றுக்கு தற்போதைய பயமற்ற நிலையே காரணமாகும். ஜனாதிபதி பதவிக்காலம் இரு தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலைக்கு மீளவும் திரும்பியதுடன் அப்பதவிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு சுதந்திர ஆணைக்குழு நியமித்தல் போன்ற விடயங்களுக்கு 19 ஆவது திருத்தம் இடமளித்திருப்பது போன்றவை இலங்கை ஜனநாயகம் ஏற்படுத்திக்கொடுத்த வரலாற்று மைல்கல்கள். ஆகவே தொடர்ந்துமிருக்கும்.

ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து முடிந்த வரையில் தேர்தலை வெகு விரைவாகவே நடத்துவது என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்குமானால் மகிந்த ராஜபக்சவினது மீள்வருகைக்கான நம்பிக்கையை அது தகர்த்திருக்கும் என்பதே சிறிசேன மீது குற்றஞ்சாட்டுபவர்கள் அடித்துக்கூறுகின்றனர். அந்த நேரத்தில் மகிந்த ராஜபக்சவுக்கெதிரான உணர்வுகள் பாரிய அளவினதாக இருந்தது மட்டுமல்லாமல் தன்னை அவர் மீளமைத்துக்கொள்வதற்கு நேரமும் இருந்திருக்காது. அந்த 100 நாள் திட்டமுங்கூட கடன் முடி விவகாரம் போன்ற விடயங்கள் மூலம் UNP அரசை பலவீனப்படுத்தியதாயிற்று. அப்படியிருந்தும் அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டது, பொது மக்களுக்கான சேவைப் பகுதியினர் மற்றும் ஓய்வூதியர் போன்றோருக்கான சம்பள அதிகரிப்பு போன்ற குறிப்பிடத்தக்க சில குறியிலங்குகள் சாதகமான பலனைக்கொண்டிருந்தன. ராஜபக்ச அரசு இவ்விடயங்களை தவறவிட்டிருந்தது.

SLFP அல்லது UPFA வேட்புமனுப் பட்டியலினூடாக மகிந்த ராஜபக்ச தெரிந்துகொள்ளப்படுவதை ஜனாதிபதி சிறிசேன வெற்றிகரமாக தடுத்திருப்பாரேயாகில் என்ன நடந்திருக்கும்? அதிகாரத்தின் மீது ராஜபக்சவுக்கிருந்த தணியாத வேட்கை புதியதொரு குழுவை ஏற்படுத்திக்கொண்டு மீண்டும் பாராளுமன்றத்திற்கான போட்டியில் குதிக்கும்படி அவரை உந்தித் தள்ளியிருக்கும்.

போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதாக மகிந்த ராஜபக்ச உரிமை பாராட்டுவது ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருந்தாலுங்கூட ஏற்படுத்தப்பட வேண்டிய சமாதானம் பற்றி அவர் கூறப்போவது என்ன? போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றங்களுக்காக இலங்கை தொடர்ந்தும் ஐ.நா. மனித உரிமை சபை குற்றவாளிக் கூண்டிலேதான் நின்றுகொண்டிருக்கிறது. ஜனவரி 8 ஆம் திகதியன்று தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களால் ராஜபக்ச ஒட்டுமொத்தமாகவே தான் நிராகரிக்கப்பட்டார்.

அவரது பொருளாதாரக் கொள்கைதான் என்ன?

பெருந்தெருக்கள்- அதிவேகசாலைகள், விமானநிலையங்கள், துறைமுகங்கள், கிரிக்கெட் விளையாட்டரங்கங்கள் மற்றும் அசாதாரண வட்டிவிகித அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட பாரிய கடன்களில் எழுந்த அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றால் வறிய மக்களுக்கு ஏற்பட்ட அனுகூலங்கள்தான் என்ன?

மக்கள் சேவையென்ற பெயரில் அவர்கள் மத்தியில் நீங்கள் திணிப்பவையெல்லாம் சேவையாகிவிடாது!

மக்களது தேவைகளை இனங்கண்டு உரிய முறையில் அவற்றை நிறைவேற்றி வைப்பதே உண்மையான சேவை!

-தமிழில்-யோகர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு

# 116 பேர் உயிரிழப்பு





## 7.5 இலட்சம் பேர் இடம் பெயர்வு

**(இஸ்லாமபாத்)**

**பாகிஸ்தானில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கனத்த மழை காரணமாக வெள்ளத்தில் சிக்குண்டு இதுவரை 116 பேர் பலியாகியுள்ளனர். 7 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.**

பாகிஸ்தானில் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பலத்த மழை கொட்டுகிறது.

இதனால் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அணைகள் நிரம்பியதால் திறந்து விடப்பட்டுள்ள வெள்ளம் ஊருக்குள் பாய்ந்ததால் வீடுகள் மற்றும் விளை நிலங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

மீட்பு பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. மொத்தம் 4 1/2 இலட்சம் இராணுவ வீரர்கள் இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மழை வெள்ளம் மற்றும் வீடுகள் இடிபாடுகளில் சிக்கி இதுவரை 116 பேர் பலியாகினர். மேலும் 7 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வீடுகள் இன்றி தவிக்கின்றனர். வெள்ளப் பகுதிகளில் சிக்கியுள்ளனர் என தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை வெள்ளத்தில் சிக்குண்டு உயிரிழைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (3-7)

# குடை தயாரிப்பில் இந்தியாவின் சாதனையை முறியடித்தது சீனா



மிகப்பெரிய குடை தயாரிப்பில் இந்தியாவின் உலக சாதனையை முறியடித்த சீனா, புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தைச் சேர்ந்த ஒரு குடை தயாரிப்பு நிறுவனம், 23 மீற்றர் விட்டம், 14.4 மீற்றர் உயரத்தில் பிரமாண்டமான குடையை தயாரித்து அறிமுகம்செய்தது.

சுமார் 5700 கிலோ எடையுடன், 418 சதுர மீற்றர் பரப்பளவை மறைக்கும் அளவுக்கு பிரமாண்டமாக இருந்தது. இதற்கு கின்னஸ் அமைப்பின் சீன பிரதிநிதிகள் பரிந்துரை செய்து சான்றிதழ் அளித்துள்ளதாக உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது.

இதற்கு முன், இந்தியாவில் 17.06 மீற்றர் விட்டம், 10.97 மீற்றர் உயரத்தில் 2010ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட குடைதான் இதுவரை உலக சாதனையாக இருந்தது. இந்த குடை 2010ஆம்ஆண்டுஒகஸ்ட் 14ஆம திகதி புனேயில் ஒரு வணிக வளாகத்தில் அறிமுகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (3-7)

# சிரியாவில் உக்கிர மோதல் விமானம் விழுந்து 17 பேர் பலி

சிரியாவில் அரசுப் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்குமிடையே தொடர்ந்து சண்டை நடைபெற்று வரும் நிலையில், அரசு விமானப்படை விமானம் ஒன்று குடியிருப்பு பகுதியில் விழுந்து நொறுங்கியதில் 17 பேர் பலியாகியுள்ளனர்.

அரசு வசம் இருந்த அரிகா நகரை கடந்த மே மாதம் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். அந்த நகரத்தை மீட்பதற்காக கிளர்ச்சியாளர்களுடன் இராணுவம் தொடர்ந்து சண்டையிட்டு வருகிறது. அந்த வகையில், நேற்று முன்தினம் இராணுவ விமானம் அந்த நகரின் மீது தாக்குதல் நடத்துவதற்காக சென்றபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து விழுந்து நொறுங்கியுள்ளது.

விமானம் வீடுகள் மீது விழுந்ததால் பல வீடுகள் நொறுங்கி தரைமட்டமாகின. இதில் 17 பேர் பலியானதாகவும், பலர் படுகாயம் அடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. (3-7)

# போகோஹராம் தீவிரவாதிகளிடமிருந்து 178 பேரை மீட்டது நைஜீரிய இராணுவம்

நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகளின் முகாம்களில் தாக்குதல் நடத்தி அவர்களிடம் பிணைக் கைதிகளாக இருந்த 178 பேரை விடுவித்திருப்பதாக அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறியதாவது, வடக்கு போர்னோ பகுதியில் நடந்த சண்டையில் பயங்கரவாதிகளின் பல முகாம்களை இராணுவம் அழித்துள்ளது.

அங்கு சிக்கியிருந்த 178 பேர் பத்திரமாக விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்டவர்களில் 101 பேர் சிறுவர்கள், 67 பேர் பெண்கள் என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் போகோஹராம் தீவிரவாதிகளிடமிருந்து நூற்றுக்கணக்கான பெண்களும், குழந்தைகளும் இராணுவத்தால் மீட்கப்பட்டாலும், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சிபோக் நகரப் பாடசாலையிலிருந்து பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட 200 மாணவிகளில் எவரும் இதுவரை மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## பொலிஸ் அதிகாரம் கிடைத்தால்

# பெண்கள் நள்ளிரவிலும்கூட டில்லியில் நடமாட முடியும்



புதுடில்லியில் ஆம் ஆத்மி கட்சியின் கட்டுப்பாட்டில் பொலிஸ் அதிகாரம் வந்தல், அழகான பெண்கள் நள்ளிரவிலும் வெளியேபோக முடியும் என்று சோம்நாத் பார்தி தெரிவித்துள்ளார்.

முன்னாள் டில்லி மாநில சட்ட அமைச்சரான சோம்நாத் பார்தி இதுபோன்ற கருத்தை தெரிவித்து மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

டில்லி அரசுக்கு பாதுகாப்பு விவகாரத்தில் முழுச் சுதந்திரம் கொடுத்தால் அழகான பெண்கள் நள்ளிரவிலும் பயம் இல்லாமல் வெளியே செல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

நாங்கள் டில்லியில் முழு பாதுகாப்பு வழங்குவோம் என்று சோம்நாத் பார்தி தெரிவித்துள்ளார்.

டில்லி சட்டசபையில் விசாரணை கமிஷன் வழங்குவது தொடர்பாக ஆலோசனை நடத்தியபோது சோம்நாத் பார்தி இதனை தெரிவித்துள்ளார்.

சோம்நாத் பார்தியின் இந்த கருத்தானது, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு காங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதா கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் சார்மிஸ்தா முகர்ஜி கூறுகையில், இது பெண்களை நோக்கிய முற்றிலும் வெறுக்கத்தக்க மற்றும் தரக்குறைவான கருத்தாகும், அவரிடம் இருந்து இதுபோன்ற கருத்து வந்ததில் எங்களுக்கு எந்தவொரு ஆச்சரியமும் கிடையாது. இது முற்றிலும் அவருடைய நடவடிக்கையை காட்டுகிறது என்று கூறியுள்ளார்.

டில்லி சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவராக உள்ள பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் விஜேந்திர குப்தா தெரிவிக்கையில், இது மிகவும் கண்டிக்கத்தக்க கருத்தாகும் என்று கூறியுள்ளார்.

இந்த கருத்தானது, அவர் பெண்களை பற்றி என்ன நினைக்கிறாரோ அதனை காட்டுகிறது.

இது மிகவும் கண்டிக்கத்தக்க கருத்தாகும். பெண்களை பற்றி இதுபோன்ற வார்த்தையை பயன்படுத்திய சோம்நாத் பார்தியை அங்கிருந்த முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தடுத்து நிறுத்தவில்லை, என்று பாரதீய ஜனதா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

# சாகச நிகழ்ச்சியில் விபரீதம் வெடித்து சிதறிய ஹெலிகொப்டர்



ரஷ்யாவில் சர்வதேச விமான சாகச நிகழ்ச்சியின் போது ஹெலிகொப்டர் கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் அதன் விமானி உயிரிழந்தார்.

ரஷ்யாவின் ரியாசான் பகுதியில் உள்ள இராணுவ மைதானத்தில் விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பல்வேறு நாடுகளின் விமானங்கள் கலந்து கொண்டன. இந்நிலையில் ரஷ்யாவின் Mi-28 ரக ஹெலிகொப்டர்களும் சாகச முயற்சியில் ஈடுபட்டிருந்தன.

அதன்படி வானில் ரஷ்யாவின் நான்கு ஹெலிகொப்டர்கள் அட்டகாசமாக சாகசம் மேற்கொண்டன. அப்போது எதிர்பாராத விதமாக ஹெலிகொப்டர் ஒன்று நிலைதடுமாறியது.

விமானியின் கட்டுப்பாட்டை இழந்த ஹெலிகொப்டர் தரையில் விழுந்தது. இதனால் அது தீப்பற்றி எரிந்தது. இந்த விபத்தில் அதன் முதன்மை விமானி பரிதாபமாக உயிரிழந்தார்.

எனினும் மற்றொரு விமானி உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து நடைபெற்றதாக கூறப்படுகிறது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மீது தேர்தல்கள் ஆணையாளர் அதிருப்தி

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செய்தி ஒளிபரப்பு குறித்து தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபன செய்திகளில் பக்கச்சார்பு நிலைமை காணப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

செய்தி ஒளிபரப்பில் பக்கச்சார்பு தன்மை காணப்படுவதாக தேர்தல் ஆணையாளர், ஜனாதிபதி செயலாளர் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் மாற்றம் கொண்டு வரப்படாவிட்டால் தமது அதிகாரங்களை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பக்கச்சார்பு தன்மையை தடுக்க தலையீடு செய்ய நேரிட்டது.

ஏற்கனவே பல தடவைகள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரச ஊடகங்களை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க 19 ஆம் திருத்தச் சட்டத்தில் தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தீர்வு கிடைக்கும் வரை அமைச்சுப்பதவிகளை நாம் பெறவேமாட்டோம்

## சம்பந்தன் கூறுகிறார்

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்று கிடைக்கும் வரை அமைச்சர் பதவிகளையோ, வேறு சலுகைகளையோ தமிழ் தேசியக் கூட்டமைப்பினரோ நானோ பெறப்போவதில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

கடந்த சனிக்கிழமை காலை திருகோணமலையில் உள்ள தனது இல்லத்தில் இளைஞர் அமைப்புக்களை சேர்ந்தவர்களை சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசியல் தீர்வை நோக்கிய எமது பயணம் எவ்விடத்திலும் தரிக்கப்போவதில்லை ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன எத்தகைய வெற்றியை அடைந்தாரோ அந்த வெற்றியை உறுதி செய்யும் வகையில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலின் முடிவுகள் அமையுமென நாம் பலமாக நம்புகின்றோம். அவ்வாறு இல்லையாயின் பலமான பாராளுமன்றமொன்றில் மைத்திரியின் அரசாங்கம் அமைவதற்கு நாம் ஆதரவு நல்கவும் தயாராகவு முள்ளோம்.

மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவு அரசாங்கமானது மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசாங்கமாக அமையுமாயின் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை 2016 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்னமே பெற்றுத் தீர்வோமென என்னால் நம்பிக்கையாக கூற முடியும். அரசியல் தீர்வொன்று கிடைத்தபின்பே ஆட்சியாளர்களிடமிருந்து அமைச்சுப் பதவிகளையோ அல்லது வேறு சலுகைகளையோ நாம் பெற முயற்சிப்போம். தவிர எக்காரணம் கொண்டும் அரசியல் தீர்வை அடையாத வரை எந்தவொரு அமைச்சர் பதவிக்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாசித்து நிற்காதென நீங்கள் உறுதியாக நம்பலாம்.

எங்கள் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். அவர்களின் பொருளாதார நிலைமைகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்பதில் நான் மாற்றுக் கருத்துக் கொண்டவனல்ல. அமைச்சர் பதவியொன்றை எடுக்கும் சாத்திய நிலையொன்று உருவாகுமாக இருந்தால் கப்பல் துறை துறைமுகங்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சுப்பதவிகளைப் பெற்று இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென்பது எனது எண்ணமாகும். அந்த நிலை உருவாகுவதற்கு அரசியல் தீர்வைப் பெறும் சாதகமான சூழ்நிலையொன்று உருவாகவேண்டும். உருவாகுமென்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது மக்களுக்கான அரசியல் தீர்வு சம்பந்தமாக எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகவும் உறுதியாகவும் கூறியுள்ளோம். தெற்கில் எமது விஞ்ஞாபனம் பற்றிய சலசலப்பு ஏற்பட்டிருப்பதை நான் அறிவேன். எமது உறுதியான நிலைப்பாட்டையும் தெளிவான கொள்கைகளையும் தெற்கிலுள்ள சிங்கள மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் நாட்டை பிரியுங்கள் என்று கேட்கவில்லை. பிளவுபடாத நாட்டுக்குள் நிலையானதும் நிரந்தரமானதும் நியாய பூர்வமான அரசியல் தீர்வொன்றை தாருங்கள் என்றே கேட்கின்றோம். அவ்வாறு கேட்பதற்கு எமக்கு பூரண உரிமையுண்டு. நாங்கள் இந்த நாட்டில் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்திருக்கின்றோம். வடகிழக்கு இணைந்த சமஷ்டி முறையிலான பிராந்திய சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்பதே எமது கோரிக்கை. அதுதான் எமது உறுதியான நிலைப்பாடுமாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் பொறுத்தவரை அவர் ஒரு தாராண்மைவாதி. மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் கிங் போன்ற உலகத் தலைவர்களின் கொள்கைகளை நான் நேசிப்பவன் அவர்களைப்போல வாழ விரும்புகின்றவன். அந்த தலைவர்களின் கொள்கையைப் பின்பற்றி இந்த நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் சமத்துவமான உரிமைகளைப் பெற்று வாழ என்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன் என்று ஜனாதிபதி கூறிவருவதை கேட்கின்றோம். எனவே தான் இந்த ஜனாதிபதியின் காலத்துக்குள் நிலையான நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை தமிழ் மக்கள் பெற்று விடவேண்டுமென்பதில் த.தே.கூட்டமைப்பு அக்கறை கொண்டதாக காணப்படுகிறது.

தேர்தல் முடிந்த பின்பு ஏற்படக்கூடிய உள்நாட்டு அரசியல் சூழ்நிலையைக் காட்டிலும் வரவிருக்கும் புதிய அரசாங்கம் எதிர் கொள்ளக்கூடிய சவால்களையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். மனித உரிமைப் பேரவையின் அறிக்கையானது செப்டெம்பர் மாதம் அளவில் வெளிவரவிருக்கிறது. ஏற்கனவே ஒருமுறை ஒத்தி வைக்கப்பட்ட மனித உரிமை அறிக்கையானது இன்றைய அரசியல் சூழலில் அதுவும் வரவிருக்கும் புதிய அரசாங்க சூழலில் பாரிய மாற்றம் ஒன்றைக் கொண்டுவருமென்று நம்பலாம். 66 வருட காலமாக மையம் கொண்டிருந்த இனநெருக்கடிகளுக்கு நல்லதொரு விடிவுகாலத்தைப் பிறப்பிக்குமென்பது எல்லோருடைய எதிர்பார்ப்பாகும். இவ்வாறானதொரு சாத்தியமான சூழலில் வெல்ல முடியாத சர்வதேசத்தால் அறியப்படாத மாற்றுக்கட்சிகளுக்கு உங்கள் வாக்குக்களையிட்டு உங்கள் அரசியல் உரிமைகளை பாழாக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷ உலகக்கிண்ணத்தை வென்றிருந்தால் அவர்தான் தலைவர்

## அமைச்சர் அர்ஜுன கிண்டல்

(கொழும்பு)



1996 ஆம் ஆண்டு கிரிக்கெட் உலக கிண்ணத்தை வென்ற அணியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டிருந்தால் அவரே இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக இதுவரை இருந்திருப்பார் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மீரிகம வெவேல்தெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இரண்டாம் அணித்தலைவர்களை உருவாக்கவில்லை.

1996 ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை வென்ற பின்னர், இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைத்துவத்தை வேறு ஒருவருக்கு வழங்க என்னால் முடிந்தது. நாட்டை நேசிக்கும் வீரர்கள் என்னிடம் இருந்தனர்.

அவர்கள் ஏனையவற்றை ஒதுக்கி வைத்து விட்டு நாட்டை பற்றி சிந்திக்கும் வீரர்கள். இதனால், அணிக்கு தலைமை தாங்கி உலக கிண்ணத்தை என்னால், நாட்டுக்கு கொண்டு வர முடிந்தது. நாங்கள் விளையாடும் போது இரண்டாம் அணி ஒன்றை உருவாக்குவோம்.

எமக்குப் பின்னர் யார் தலைவர் என எண்ணுவோம். நாங்கள் வழமையாக தலைவர்களை உருவாக்குவோம்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இரண்டாம் அணி தலைவர்கள் உருவாக இடமளிக்கவில்லை.

இதனால், மகிந்த ராஜபக்ஷ 1996 ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை வென்ற அணியின் தலைவராக இருந்திருந்தால், இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராகவே அவரே தொடர்ந்தும் இருந்திருப்பார் என்று எனக்கு எண்ண தோன்றுகிறது.

இவ்வாறு, தான் மற்றும் தனது குடும்பத்தினரின் வெற்றிக்காக மாத்திரமே மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தார் எனவும் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# 3 பிரதான அரசியல் கட்சிகளையும் மக்கள் நிராகரிக்க வேண்டுமாம்

## சோமவன்ச அமரசிங்க கூறுகிறார்

பிரதான அரசியல் கட்சிகள் மூன்றினையும் மக்கள் நிராகரிக்க வேண்டுமென ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய மூன்று கட்சிகளுக்கும் நாட்டை மீட்கும் ஸ்திரமான திட்டங்கள் எதுவும் கிடையாது.

எனவே இந்த மூன்று கட்சிகளையும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது மக்கள் நிராகரிக்க வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை தெளிவுபடுத்தும் திட்டமொன்றை மக்கள் சேவை கட்சி ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் தெளிவூட்டும் ஒரு இலட்சம் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் பழைய பாடல்களையே ஒலிபரப்பி வருகின்றன.

மக்கள் இந்த நபர்களின் வெட்டிப் பேச்சை கேட்டு கேட்டு விரக்தி அடைந்துள்ளனர்.

எனவே மக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி மதிநுட்பமான தீர்மானம் ஒன்றை எடுப்பார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆட்சியை வழங்கினால் மீளவும் ஒரே குடும்பத்திடம் ஆட்சி ஒப்படைக்கப்படும்.

ஜனவரிமாதம் 8ஆம் திகதி வென்றெடுக்கப்பட்ட சுதந்திரத்தை முன்னோக்கி நகர்த்தக்கூடிய புத்திஜீவிகளிடம் நாட்டை ஒப்படைக்கும் வகையிலான தீர்மானம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என சோமவன்ச அமரசிங்க கொழும்பு ஊடகமொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்மூடைகளின் கொள்வனவு முல்லை. மாவட்டத்தில் ஆரம்பம்

## இரண்டு கட்டங்களாக நடைபெறுமென கமநல சேவை நிலையத்தினர் தெரிவிப்பு

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளிடம் உள்ள சிறுபோக நெல்மூடைக்ளின் கொள்வனவு நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநலசேவை நிலையத்தினால் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

இதற்கமைய நெல்மூடைகளின் கொள் வனவானது, நெல் சந்தைப்படுத்தும் சபையி னரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14ஆம் திகதி வெள் ளிக்கிழமை வரை ஒரு கட்டமாகவும் எதிர் வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை இழிரண்டாம் கட்டமாகவும் நடைபெறுமென முல்லைத்தீவு மாவட்ட கம நலசேவை நிலையத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கை யில் ஈடுபட்ட விவசாயி ஒருவரிடமிருந்து 1/2 ஏக்கருக்கு 500 கிலோகிராம் நெல்லும் ஒரு ஏக்கர் நெற்செய்கையில் ஈடுபட்டவரிடமி ருந்து ஆயிரம் கிலோகிராம் நெல்லும் 1 1/2 ஏக்கர் நெற்செய்கையில் ஈடுபட்டவரிடம் இரு ந்து ஆயிரத்து 500கிலோகிராம் நெல்லும் 2ஏக்கருக்கும் அதற்கு மேற்பட்ட நெற்செய் கையில் ஈடுபட்டவரிடம் இருந்து 2ஆயிரம் கிலோகிராம் நெல்லும் கொள்வனவு செய்யப் படவுள்ளது.

ஒரு கிலோகிராம் குறுகிய வெள்ளைச் சம்பா நெல் 50 ரூபாவாகவும் ஒரு கிலோ கிராம் குறுகிய சிவப்பு சம்பா நெல் 50 ரூபாவாகவும் வெள்ளை நிற நீண்ட நாடு நெல் 45 ரூபாவாகவும் சிவப்பு நிற நீண்ட நாடு நெல் 45 ரூபாவாகவும் கட்டுப்பாட்டு விலையில் விவசாயிகளிடம் இருந்து கொள் வனவு செய்யப்படவுள்ளது.

நெல் சந்தைப்படுத்தும் சபையின் கொள் வனவு மையத்திற்கு நெல்மூடைகளை விவ சாயிகள் எடுத்து செல்வதற்கு முன்னர் கமக் கார அமைப்பின் ஊடாக கமநலசேவை நிலையத்தில் வழங்கப்படுகின்ற நெல் கொள் வனவு படிவத்தை பெற்று அதனைப் பூரணப் படுத்தி உரமானியக் கொள்வனவின்போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினையும் இணை த்து நெல் சந்தைப்படுத்தும் சபையின் கொள் வனவு மைய முகாமையாளரிடம் நேரடியாக ஒப்படைக்கவேண்டும். இதேவேளை விவ சாயிகள் தங்களின் நெல்லின் தரத்தை பரி சோதிப்பதற்கு நெல் மாதிரிகளுடன் நண் பகல் 12மணி தொடக்கம் பிற்பகல் 2மணி வரை நெல் சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவு மையத்திற்குச் சென்று பரிசோ தனை செய்து தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த காலம் போன்று நெல் கொள்வனவிற்கான கொடுப்பனவுகள் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப் பிலிடப்படமாட்டாது. இம்முறை இலங்கை வங்கியூடாக நேரடியாக பணம் விவசாயி களுக்கு வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (2-15)




# சிறுபோக விளைச்சல் குறைவு அறுவடையில் சப்பிநெல் அதிகம்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நடப்பாண்டில் சிறுபோக அறுவடையின் போது விளைச்சல் குறைவாகவும் சப்பிநெல் (பதர்நெல்) அதிகரித்துக் காணப்படுவதாகவும் விவசாயி களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் தெரியவருவதாவது, கிளி நொச்சி மாவட்டத்தில் தற்பொழுது சிறுபோக நெல் அறுவடை பரவலாக நடைபெற்று வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்பட்ட கபிலநிறத்தத்தி எனும் நோய்த்தாக்க த்தினால் நெல்மணிகளின் பால்பருவ காலத்தில் இந்நோய்த்தாக்கம் ஏற்பட்டதை யடுத்து விளைச்சல் குறைவடைந்து சப்பி நெல் அதிகரித்து காணப்படுகிறது. இந் நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட கிருமிநாசிகளை பல ஆயிரக்கணக்கான ரூபாக்களை செலவு செய்து விசிறிய போதி லும் பலன் கிடைக்கவில்லையென விவ சாயிகள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு வங்கிகளிடமிருந்தும் தனி யாரிடமிருந்தும் வட்டிக்கு பணம் பெற்று பல எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் விவசாயத்தில் ஈடுபட்ட போதும் தாம் நட்டம் அடைந்துள்ள தாகவும், வங்கிகளிடமிருந்தும் தனி யாரிடமிருந்தும் கடனாகப் பெற்ற பணத்தை மீளச் செலுத்த முடியாத நிலை தோன்றி யுள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டு

### விவசாயிகளின் ஆதங்கம்

கின்றனர்.

இதேவேளை கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவிலுள்ள முரசுமோட்டை. கண்டாவளை, புளியம்பொக்கணை, ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்பயிர்கள் மீது கபில நிறத்தத்தி நோய்த் தாக்கம் காணப்படுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாய திணைக்கள அதிகாரிகள் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண் டும் எனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். (2-15)

## போதைப்பொருள் ஒழிப்பு குறித்த கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

அக்கராயன் பிரதேசத்தில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான கலந்து ரையாடல் நேற்று முற்பகல் 10 மணி யளவில் கொங்காதரன் குடியிருப்பில் அமை ந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் கிராம அலுவலகர் எஸ்.மோகனப்பிரியன் தலை மையில் நடைபெற்றது.

பிரதேசங்களில் அதிகரித்து வருகின்ற போதைப்பொருள் பாவனையைக் கட்டு ப்படுத்தல் மற்றும் இல்லாதொழித்தல் போன்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன. கருத்து ரைகளை அக்கராயன் பிரதேச வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் ந.சுஜீத்காந், தாதிய உத்தியோகத்தர் தே.சுதன் ஆகியோர் நிகழ்த்தினர். (2-272)

# வைத்தியசாலைக் கழிவுப்பொருட்கள் உரியமுறையில் அகற்றப்படுவதில்லை

## வீதியோரத்தில் கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடு

(சுரணவாய்)

பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலை யிலிருந்து அகற்றப்படும் கழிவுகள் அருகில் உள்ள வீதியில் கொட்டப்பட்டு வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் அவ்விடம் துர்நாற்றம் வீசுவ தாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அத் துடன் கழிவுப்பொருட்களை நாய்கள், காகங் கள் வீதியின் நடுவே இழுத்துப்போடுவதால் அவ்வழியாக பயணிப்போர் பல்வேறு சிரமங் களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் இவ்வீதியில் மேற்படி கழிவுகளை கொட்டு வதால் தொற்று நோய்கள் பரவவாய்ப்புள் ளதாக பயணிப்போர் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறான சுகாதாரச்சீர்கேடு தொடர்பாக அப்பகுதி பொதுமக்கள் சம்பந்தப்பட்ட பிரதேச சபைக்கு தெரியப்படுத்தியும் இதுவரை அக் கழிவுகளை அகற்றுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெறவில்லை. இப் பிரச்சினைக்கு தீர்வு வேண்டிய பொதுமக்கள் இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற சிவில் பாதுகாப்புக்குழு கூட்டத்தில் தெரிவித்தனர். இதற்கு காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.என்.ஜபார் இது தொடர்பாக உரிய தீர்வினைப் பெற்றுத்த ருவதாக மக்களிடம் உறுதியளித்திருந்தார்.

தொற்றுநோய்கள் பரவக்கூடிய வைத்திய சாலைக்கழிவுகளை உரிய முறையில் அகற் றுமாறு பொதுமக்கள் வைத்தியசாலை ஊழி யர்களுக்குஅண்மைய நாட்களாக வேண்டு கோள் விடுத்திருந்தனர்.

- எனவே கொட்டப்படுகின்ற வைத்தியசாலை க்கழிவுகளை விரைவாக அகற்றித்தருமாறும் சுகாதாரத்தை பேணுவதற்கு உதவுமாறும் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (25-60)

# ரணிலுக்குத்தான் அதிகளவு ஆதரவு காணப்படுகின்றது!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கே அதிகளவு ஆதரவு காணப்படுவதாக மாற் றுக்கொள்கைகளுக்கான கேந்திர நிலை யத்தின் கருத்துக் கணிப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவை விடவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அதிகளவு ஆதரவு காணப்படுவதாக தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சிறுபான்மை இன சமூகத்தவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்படுவார் என தெரிவித் துள்ளனர்.

சிங்கள இன சமூகத்தவர்கள் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியீட்டி பிரதமராக நியமிக்கப்படுவார் என கருத்து வெளியிட் டுள்ளனர்.

சிங்கள இன சமூகத்தில் 36 வீதமா னவர்கள் மகிந்த பிரதமராவார் எனவும், 31.9 வீதமானவர்கள் ரணில் விக்கிரமசிங்க பிரதமராவார் எனவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களில் 62.3 வீதமான வர்களும், மலையகத் தமிழர்களில் 71.1 வீதமானவர்களும், முஸ்லிம்களில் 62.3 வீதமானவர்களும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்படுவார் என கருத்துக் கணிப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் சுயாதீனமான முறையில் நடைபெறும் என 66.9 வீதமானவர்கள் கருதுகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டி யிட்டிருக்கக்கூடாது என 42 வீதமான இலங்கையர்களும், போட்டியிட வேண்டு மென 40 வீதமானவர்களும் கருத்து வெளி யிட்டுள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் கருத்துக் கணிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக்கிண்ணம் - 2015

## ஸ்கந்தாஸ்ராரை வீழ்த்தியது யாழ்.சென்றல் அணி



யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் 3-வது வருடமாக நடத்தி வரும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2 ஆவது சுற்றில் பிரிவு II இல் நடைபெற்ற போட்டியில் யாழ்.சென்றல் அணி,ஸ்கந்தாஸ்ரார் அணியை 55 ஓட்டங்களால் வெற்றி பெற்றுமுள்ளனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 20 ஓவர்களில் 7இலக்குகளை இழந்து 158 ஓட்டங்களை பெற்றுள்ளனர்.

பாவேந்திரா-11, றஜீவ்குமார்-63,சுதர்ஸன்-18,கலிஸ்ரன் 20, சவிஸ்ரன்-13 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் களமிறங்கிய ஸ்கந்தாஸ்ரார் அணி சார்பாக சன்ஜெயன்-02,கார்த்திகன்-01,மிதுஜன்-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 20ஓவர்களில் 9இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றனர்.

பென்யோய்-23, கார்த்திபன்-23, தனுகாஸ்-10 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.சென்றல் அணி சார்பாக சவிஸ்ரன்-01,கஜி-03, றஜீவ்குமார்-01,சபாதீஸ்-02, திருக்குமரன்-01இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியில் யாழ்.சென்றல் அணியை சார்ந்த வி.றஜீவ்குமார் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்வுக்கு யாழ்.சென்றல் அணிக்கு 4.78 புள்ளிகளையும்ஸ்கந்தாஸ்ரார்அணி 1.73 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது.

08.08.2015 அன்று யாழ். சென்றல் அணி பற்றீசியன்ஸ் அணிக்கு எதிராகவும் 09.08.2015 அன்று யாழ்.சென்றல் அணிக்கு எதிராக சிறிகாமாட்சி அணியும் எதிர் கொள்ளவுள்ளனர். (க)



# விக்னேஸ்வரா வி.கழகம் இறுதிப் போட்டிக்கு தெரிவு



முல்லைத்தீவு,உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் முல்லை/யங்கஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9பேர் கொண்ட போட்டியானது முல்லை. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியின் அரையிறுதி ஆட்டமானது கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெற்றது.

இதில் புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் சிலாவத்தை இளம்பறவைகள் விளையாட்டுக்கழகமும் மோதின.

இப்போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் புது/விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இறுதிபோட்டியானது 09.08.2015 ஞாயிற்றுக்கிழமை புது/விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்திற்கும் முல்லை/சென்யூட் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் இடம் பெறும். (க)

# கார்மேல் போய்ஸ் சம்பியன்



அரியாலை சனசமூகத்தினால் நடத்தப்பட்ட 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில்நடைபெற்றது.

இதில் குருநகர் கார்மேல் போய்சை எதிர்த்து பொற்பதி இந்து வி.கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் அணி 5 ஓவர்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 32 பெற்றது. இதில் ரிக்கி 16பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பொற்பதி இந்து வி.கழகம் 5 ஓவர்கள் முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 28 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ரிக்கி 2 இலக்குகளையும் அலன் ஒரு இலக்கையும் றொக்சன் ஒரு இலக்கையும் செல்டன் ஒரு இலக்கையும் பெற்றுக்கொண்டனர்.

ஆட்டநாயகனாக குருநகர் கார்மேல் போய்ஸ் ரிக்கி தெரிவு செய்யப்பட்டார். (க)

# இன்றைய போட்டிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென். ஜோசப் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் வல்லை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)

# தொண்டைமானாறு வலைப்பந்து நக்கீரன் அணி வெற்றி



யாழ்.மாவட்ட ரீதியாக மகளிர் அணிகளை ஒருங்கிணைத்து தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் வலைபந்தாட்ட போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நடைபெற்ற வலைபந்தாட்ட போட்டியில் கலைமதி விளையாட்டுக்கழக பெண்கள் அணியினரை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக பெண்கள் அணியினர் இறுதி போட்டியில் மோதினர். இப்போட்டியில் நக்கீரன் அணி வெற்றிபெற்று 1 இடத்திற்கு தெரிவாகியுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தம்முன்
நிகர் இல்குரவர் இவ் ஐவர் இவரைத் தேவரைப்
போலத் தொழுது எழுக! – நீதி வெண்பா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரி கூறிய புத்திமதி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகள் அவரின் எளிமையை, நிதானத்தை காட்டி நிற்கின்றன. இந்த நாட்டின் ஜனாதிபதி இப்படியும் நடந்து கொள்ளமுடியும் என்ற புதுமையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்தியுள்ளார்.

அண்மையில் பாடசாலை ஒன்றின் நிகழ்வில் கலந்து கொண்ட அவர் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

நான் மாணவனாக இருந்த காலத்தில் எனது பாடசாலை அதிபர் என்னைப் பிரம்பால் அடித்தார். பிரம்பு முறியும் வரை அவர் என்னை அடித்தார். எனினும் நான் அது பற்றி எனது தந்தையிடம் கூற வில்லை. எனது தந்தையிடம் கூறியிருந்தால், அதிபர் அடித்ததை விட, ஒரு படி கூடுதலாக எனது தந்தை என்னை அடித்திருப்பார்.

ஆனால் இன்று ஆசிரியர் மாணவனுக்கு அடித்தால் உடனடியாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்படுகிறது என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய இந்த விடயம் சாதாரணமானதன்று.

மாணவர்களை அடித்துப் படிப்பித்தல் என்ற விடயத்தில் ஜனாதிபதி மைத்திரி உடன்பட்டுப் போகிறார் என்பது இதில் இருந்து தெளிவாகிறது.

இன்று நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் நிலவக்கூடிய மாணவர்களின் நெறிபிறழ்வுக்கு அடிப்படைக் காரணம் மாணவர்களைத் தண்டிக்க முடியாது என்பதுதான்.

ஆசிரியர் ஒருவர் மாணவனை உடல் ரீதியாகத் தண்டித்தால் பிரஸ்தாப ஆசிரியரை விளக்கமறியலில் அடைக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. இதன் காரணமாக மாணவர்களைக் கண்டு ஆசிரியர்கள் பயந்தோடுகின்ற சூழ்நிலையே உருவாகியுள்ளது.

ஒரு ஆசிரியர் மாணவனைத் தண்டிப்பதற்குள் கற்றல் செயற்பாடு மட்டுமன்றி, பழக்க வழக்கங்களும் ஒழுக்க விழுமியங்களும் உள்ளடங்கியுள்ளன.

தமிழில் **பயபக்தி** என்ற ஒரு முக்கிய விடயம் உள்ளது.

இப் பயபக்தி ஐந்து இடங்களில் நிலைநாட்டப் பட வேண்டும்.

அரசன், உபாத்தியாயர், தாய், தந்தை, மூத்த சகோதரர். எனினும் பயபக்தி என்ற பக்குவநிலை இன்று முற்றாக அழிந்து போயிற்று.

இதன் காரணமாகவே வீட்டில் பிள்ளைகளைக் கட்டுப்படுத்த முடியாத சூழல்; பாடசாலைகளில் மாணவர்களுக்குப் புத்திமதி கூறமுடியாத அவலம்; ஆலயங்களில் சண்டைகளும் சச்சரவுகளுமான துர்ப்பாக்கியங்கள் முளை எடுத்து வளர்ந்து வருகின்றன.

இத்தகைய நிலைமை நீடிக்குமாயின் நெறி பிறழ்வான சமுதாய உருவாக்கம் நம்மை அறியாமல் நடந்தேறும். எனவே மாணவர்களை அதிபர், ஆசிரியர்கள் தண்டிக்கக் கூடாது என்ற சட்ட வரையறைகள் இருந்தாலும் மாணவர்களின் நன்மை கருதி–பாடசாலையை வழிப்படுத்தும் பொருட்டு தேவையான சந்தர்ப்பங்களில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டித்தல் என்ற நடைமுறையை பின்பற்ற வேண்டும். இதனை மாணவர்களும் பெற்றோர்களும் ஏற்றுக் கொள்வது எழுதா யாப்பாக இருப்பதும் அவசியம்.

இதைத்தான் இந்த நாட்டின் மரியாதைக்குரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

எமக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியரை பொலிஸில், நீதிமன்ற வாசலில் நிறுத்தி விடுவது என்பது எங்கள் பண்பாட்டு ஒழுக்கவியலுக்கு முற்றிலும் முரணானது என்பதால், ஆசிரியர் மாணவரைத் தண்டித்துவிட்டார் என்பதை சாட்டாகக் கொண்டு ஆசிரியரை சட்டத்தின் முன் நிறுத்துகின்ற பாதகத்தை மாணவர்களும் பெற்றோர்களும் சமூகக் குழப்பங்காலிகளும் கைவிட வேண்டும்.

அப்போதுதான் எங்கள் மாணவர்கள் தொடர்பில் நாங்கள் நிம்மதியாக, மனநிறைவோடு இருக்க முடியும். அதே சமயம் மாணவர்களை கோபாவேஷத்தோடு தாக்குகின்ற புறநடை ஆசிரியத்துவத்திற்கு இது பொருந்தாது.

# இலங்கை-இந்திய தரை வழிப்பாதை திட்டம் விரைவில் சாத்தியமாகும்?

## இந்திய அரசு நம்பிக்கை

தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தையும், தலைமன்னாரையும் இணைக்கும் தரைவழி மற்றும் தொடருந்துப்பாதை இணைப்பு விரைவில் சாத்தியமாகக் கூடும் என்று இந்திய மத்திய அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையான ராஜ்யசபையில் நேற்றுமுன்தினம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு இது தொடர்பாக பதிலளித்துள்ள இந்திய மத்திய நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து இணை அமைச்சர் பொன் இராதாகிருஸ்ணன்,

தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தையும், தலைமன்னாரையும் இணைக்கும் தரைவழி மற்றும் தொடருந்துப் பாதை இணைப்பு விரைவில் சாத்தியமாகக் கூடும்.

இலங்கையையும், இந்தியாவையும் இணைக்கும் பாக்கு நீரிணைக்கு மேலான பாலத்தை அமைப்பது குறித்த திட்டத்துக்கு நிதியளிப்பது தொடர்பான சாத்திய ஆய்வை மேற்கொள்ளும்படி, ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இந்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

கப்பல்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில், இந்த இணைப்புப்பாதை அமைக்கும் திட்டம், கடலுக்கு அடியிலான சுரங்கப் பாதை மற்றும் கடலுக்கு மேலான மேம் பாலம் ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும்.

இந்த திட்டம் இன்னமும் கருத்திட்ட நிலையிலேயே இருப்பதால், இந்த திட்டத்துக்குத் தேவைப்படும் காலம் தொடர்பாக இப்போது கருத்து வெளியிட முடியாது. எவ்வாறாயினும் இந்த திட்டத்துக்கு அரசாங்கம் இன்னமும் அனுமதி வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார். (எ-11)

## மகிந்தவை கொலை செய்ய முயன்றவரிடம் விசாரணை

குருநாகல் சுதந்திர முன்னணி அலுவலகத்தில் இருந்து கைது செய்யப்பட்ட நபர் யார் என்பதனை அவரிடம் விசாரணை மேற்கொண்டதன் பின்னரே கூறமுடியும் என பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 31ஆம் திகதி சுதந்திர முன்னணி அலுவலகத்தில் வைத்து இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என அன்றைய தினம் குருநாகலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாலிந்த திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## பணவீக்கம் வீழ்ச்சி!

(கொழும்பு)

இலங்கையின் பண வீக்கம் கடந்த மாத இறுதியில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு நுகர்வோர் சுட்டெண்ணிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சத்தரசிங்க கூறியுள்ளார்.

கடந்த சில மாதங்களாக உணவு பொருட்களற்ற சில பொருட்களின் விலைகள் குறைவடைந்தமையே இதற்கான காரணம் எனவும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (எ-11)

## ஷெல்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு பூவரசம் தீவு பகுதியில் இடம்பெற்று வந்த வெடிமருந்து வியாபாரம் அப்பகுதி மக்கள் கொடுத்த தகவல் அடிப்படையில் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்ட நிலையில் அங்கிருந்து ஒரு தொகுதி ஷெல்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த தீவுக்கு பெருமளவு ஷெல்கள் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து ஷெல்களில் உள்ள வெடிபொருட்கள் எடுக்கப் பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த வெடிமருந்துகள் டைனமற் தயாரிப்புக்காக மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் கொடுத்த தகவல் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படை குறித்த வெடிப்பொருட்களை மீட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வெடிபொருட்கள் எங்கிருந்து வந்தன என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-11)

## இந்து சமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

எமது திணைக்களத்தினால் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாகவும், இந்து சமய மற்றும் அறநெறி தொடர்பான அறிவினை விருத்தி செய்யும் நோக்கத்தோடும் பின்வரும் பயிற்சி நெறிகளை பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக இலவசமாக வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1.சான்றிதழ் பயிற்சி நெறி (Certificate Course)-60 மணித்தியாலம்

2.டிப்ளோமா பயிற்சி நெறி-(Diploma Course) 180 மணித்தியாலங்கள்.

மேற்படி பயிற்சி நெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பயிற்சி நெறியில் கலந்து பயன்பெற ஆர்வமுள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் தமது அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் ஊடாக எமது திணைக்களத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 0112554 278 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

## காணாமல் போனோரின் உறவுகள் திருகோணமலையில் போராட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் போனவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து நேற்று கண்டன போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

திருகோணமலை மாவட்ட சிவில் சமூகம் மற்றும் திருகோணமலை மாவட்ட காணாமல் போனோர் சங்கத்தினால் இக்கவனயீர்ப்பு போராட்டம் திருகோணமலை சிவன் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

புதிய அரசாங்கம் காணாமல் போனோர் தொடர்பில் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை. தமது உறவுகளை மீட்பதற்கான நடவடிக்கையினை துரிதப்படுத்துமாறும், தமது கோரிக்கை தொடர்பில் விரிவான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இந்த போராட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது. பல அரசியல்வாதிகள், காணாமல்போனோர் தொடர்பில் கதைக்கின்ற போதிலும் இதுவரை காலமும் எந்தவிதமான முடிவுகளையும் பெற்றுத்தரவில்லை. எனவே இம்முறை தேர்தலை புறக்கணிப்பதாக தீர்மானித்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து உறவுகளை இழந்தவர்கள் பங்கேற்றனர். (எ-11)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### மக்களுக்குச் சேவகம்



✦ ஆண்டவனின் விருப்பம் இல்லாமல், மரத்தின் இலை கூட அசைய முடியாது.

✦ என் பணம், என் படிப்பு என்று சிறிதும் எண்ணாதே. நான் மக்களின் சேவகன், நான் பக்தன் என்று எண்ணிக் கொள்.

✦ கடவுளை அடைய வேண்டும் என்ற ஏக்கம் அதிகரித்தால், மனம் பக்குவமாகி விடும்.

✦ கடவுளைப் பற்றிய ஒவ்வொருவரின் அனுபவமும் ஒவ்வொரு வகையில் புதுமாதிரியாக இருக்கும்.

✦ உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவரவர் மனமே காரணம்.

✦ தன்னை குருவாக கருதிக் கொண்டு ஒவ்வொருவரும் மக்களுக்கு அறிவுரை வழங்குவது நல்லதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்

## தமிழர்கள் தமிழ் கூட்டமைப்புக்கு வாக்களித்து மக்களின் அபிலாசைகளை வெல்ல வேண்டும்

### சிறிதரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**எதிர்வரும் தேர்தலில் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஒட்டுமொத்த வாக்குகளையும் அளித்து எமது மக்களின் அபிலாசைகளை வெல்ல பாடுபட வேண்டும் என கேட்டுக்கொள்வதுடன், காலம் கனிகின்ற வேளையில் அதை சரியாக பயன்படுத்த வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணம் கரவெட்டியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பரப்புரை பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட யாழ். மாவட்டத்தில் இலக்கம் 10 இல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தொரிவிக்கையில்,

வரலாற்றில் பல்வேறு தடைகளையும் கடந்த வார்த்தைகளால் வடிக்க முடியாத தியாகங்களை செய்து இன்று தமிழர் எங்களின் நீண்ட கால உரிமைப் பிரச்சினை உலகால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிராந்திய உலக வல்லரசுகளின் பார்வைகளில் முக்கிய விடயமாக இனங்காணப்பட்டுள்ள சூழலில்தான் இந்தத் தேர்தல் வந்திருக்கின்றது.

உலக அளவில் இந்தத் தேர்தல் எதிர்ப்பார்ப்புக்களை கிளப்பியிருக்கின்றது. இந்த தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழர்கள் தங்கள் ஜனநாயக பலத்தை எவ்வாறு முன்னெப்பொழுதையும் விட உக்கமாக ஒரு தேசியக்கட்சியான தமிழ்த் தேசிய கூட்டமைப்பினூடாக வெளிப்படுத்த வேணடியது தமிழர்கள் முன் நிற்கும் எமது கடமை.

இதையே உலகத்தின் முக்கிய தலைவர்களும் இங்குள்ள தமிழ் கட்சிகளிடம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளாரகள். நீங்கள் ஒரு தலைமைத்துவம் ஊடாக உங்கள் பிரச்சினையை சொல்லுங்கள் என அவர்கள் கூறியுள்ளார்கள்.

கடந்த காலங்களில் அரசாங்கத்தோடு இணைந்து கொண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்டவர்களால் எமது நீண்ட உரிமைப் பிரச்சினை அபிவிருத்தி வேலை வாய்ப்பு வசதிகள் என்ற பாணியில் கூறப்பட்டதால் எமது அபிலாசைகளை வென்று செல்வதில் இடையூறுகள் ஏற்படடுள்ளன.

எனவே இம்முறை வருகின்ற இந்த வரலாற்று சந்தர்ப்பமான தேர்தலில் தமிழர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு ஒட்டுமொத்த வாக்குகளையும் அளித்து எமது மக்களின் அபிலாசைகளை வெல்ல பாடு படவேணடும் என கேட்டுக் கொள்வதுடன் காலம் கனிகின்ற வேளையில் அதை சரியாக பயன்படுத்த வேண்டும் எனவும் மேலும தெரிவித்துள்ளார். (இ-7)

---

## நடைபெற்றவை இனவழிப்புப் படுகொலைகளா? இல்லையா? தமிழ் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துமா?

### சுமந்திரனிடம் ஜனநாயகப் போராளிகள் கட்சி கேள்வி



யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் - முள்ளிவாய்க்கால் அவலம் வரை - இடம்பெற்ற கொடூரங்கள் இனவழிப்புப்படுகொலைகளா? இல்லையா? - இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதை சுமந்திரன் இப்போதாவது தமிழ் மக்களுக்குத் தெளிவான சொற்களில் வெளிப்படுத்துவாரா? - இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் மூத்த ஊடகவியலாளரும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் இணைப்பாளருமான என். வித்தியாதரன். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சிலந்திச் சின்னத்தில் சுயேட்சைக் குழுவாக களம் இறங்கியிருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைமை வேட்பாளரான அவர், இவ்விடயத்தைஒட்டி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு,

ஈழத் தமிழர்களின் பல நூற்றாண்டு கால வரலாற்றில் மிகக் கோரமான - மிகக்கொடூரமான - மிக மோசமான - அவலமாக அரங்கேறிய இனவழிப்புப் படுகொலையின் தொடர் நடவடிக்கையே முள்ளி வாய்க்காலில் ஓரங்கமாக முடிவுற்றது. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொடூரங்கள் பற்றிய விடயங்கள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் முன்பாக வந்துள்ள நிலையில், இலங்கைத் தமிழர்களின் சார்பில் அவர்களினால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் தாங்களே அவ்விடயங்களை ஊடாடிக் கையாண்டு வருகின்றனர் எனத் தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ. சுமந் திரன் கூறுகின்றார்.


ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கை தொடர்பாகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை, அவை பிரேரணை நகல் வடிவத்தில் இருக்கும்போதே தங்களிடம் காட்டித்தான் அமெரிக்கா மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வவுனியாவில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகளுடன் பேசும்போது சொல்கிறார். முள்ளிவாய்க்கால் வரை நடந்து முடிந்த அந்தக் கொடூரம் இனவழிப்புப் படுகொலைகள் என்பதே தமிழர்களின் ஒரே நிலைப்பாடு. 1983 இல் தென்னிலங்கையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனக கலவரத்தையே அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி "பெரும் இனப் படு கொலை" செயற்பாடு என்றே இந்திய நாடாளுமன்றத்தில் வகைப்படுத்தியிருந்தார். ஆனால், இந்த இன வழிப்புக் கொடூரக் குற்றச்சாட்டிலிருந்து சர்வதேச மட்டத்தில் கொழும்பு ஆட்சிப் பீடத்தைக் காப்பாற்றுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுவதாக அதன் செயற்பாடுகள் காட்டுகின்றன . முள்ளிவாயக்கால் வரை இடம்பெற்றவை "இன வழிப்புக் கொடூரங்கள்" அல்லது "இனப் படுகொலை" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிற தலைவர்கள் ஆங்காங்கே கூறி வருகையில், இந்த விடயங்களை சர்வதேச மட்டத்தில் கையாண்டு வரும் சுமந்திரன் மட்டும் அதை அமுக்கி வாசிக்கின்றார். அங்கு இடம்பெற்றவை இனப் படுகொலைக் கொடூரங்கள் அல்ல, வெறும் யுத்தக் குற்றங்கள் மட்டுமே என்று கூறி இலங்கைப் படைகளையும் ஆட்சித் தரப்பையும் காப்பாற்ற முயல்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமை ப்பு இந்தத் தேர்தலை ஒட்டி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சர்வதேச விசாரணை குறித்தெல்லாம் பிரஸ்தாபிக்கப்படுகின்றதே தவிர அங்கு இடம்பெற்றவை இனவழிப்புப் படுகொலைக் கொடூரங்கள்என்று குறிப்பிடப்படவேயில்லை. அந்த விஞ்ஞானபனத்தில் 1983 கலவரங்கள் குறித்து குறிப்பிடுகையில் மட்டும் இனப்படுகொலை என்ற சொல பயன்படுத்தப்படுகின்றது.

1983 இல் இடம்பெற்ற கலவரம் இனப்படுகொலை என்றால் 2009 இல் அரங்கேறிய கொடூரங்கள் அதைவிட மிகமிக மோசனவையல்லவா? அவற்றை இனவழிப்புப் படுகொலைகள் என்று சர்வதேசத்திடம் இடித்துரைக்க கூட்டமைப்பு பின் நிற்பது ஏன்? முள்ளிவாய்க்கால் வரை அரங்கேறியவற்றை - இலங்கைப் படைகளால் முன்னெடுக்கப்பட்ட மோசமான கொடூரங்களை - "இனப்படுகொலை"எனற வகைக்குள் அடக்கியே வடக்கு மாகாண சபையும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அப்படியான வாசகத்தைத்தான் அதில் பயன்படுத்தியிருக்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்திற்கு கூட்டமைப்பும் பொறுப்புக்கூற வேண்டும்

### கஜேந்திரகுமார் காட்டம்



எதுவுமே கிடைக்காத உள்ளக விசாரணையொன்றின் மூலம் எமது மக்கள் நடுத்தெருவில்விடப்படுவதற்கு இலங்கை அரசிற்கு அப்பால் கூட்டமைப்பு முழுமையாக எமது மக்களுக்கு பொறுப்புக்கூறவேண்டியிருக்கும். ஆட்சி மாற்றம் கோசத்தின் கீழ் கூட்டமைப்பே துரோகத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியிருக்கும். என்றோ ஒருநாள் எமது மக்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டிவரும். அப்போது இலங்கை அரசுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்திற்கு கூட்டமைப்பும் பொறுப்புக் கூற வேண்டிவருமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரித்துள்ளார்.

பிரித்தானியாவில் உள்ள சனல் 4 முக்கியமான தகவலை பொறுப்புக்கூறல் தொடர்பாக வெளியிட்டிருந்தது. தங்களுக்கு ஐ.நாவின் உள்ளக ஆவணம் கசியவிடப்பட்டுள்ளதாகவும், அந்த ஆவணம் ஐ.நாவுக்கும் இலங்கைக்கும் இடையிலே புரிந்துணர்வு ஏற்பட்டிருக்கின்றது என்றும், அந்த புரிந்துணர்வு முழுமையான பொறுப்புக்கூறலை உள்ளக விசாரணை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் கசியவிடப்பட்டுள்ள ஆவணத்தின் மூலம் தகவல் வெளியாகியுள்ளதாகவும் சனல் 4 கூறுகின்றது. இது குறித்து கருத்து தெரிவித்த அவர்,

எம்மைப் பொறுத்த வரையில் உள்ளக விசாரணையினை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி முழுமையாக நிராகரிப்பது மட்டுமல்லாது, அவ்வகையான முயற்சியையும் வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்தார்.

உள்ளக விசாரணை தொடர்பாக ஐ.நாவில் முதலாவது அமர்வில் பேசப்பட்ட ஆரம்பமான முதலாவது தீர்மானம் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் நாங்கள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றோம். இதேவேளை ஐ.நாவின் தீர்மானம் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் கருத்துக்களை முன்வைத்து வந்திருந்தோம்.

அன்றே நாங்கள் எச்சரிக்கை செய்த விடயங்கள் தான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதை வெளிப்படையாக காணமுடிகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கூட உள்ளக விசாரணைக்கு தாங்கள் இணங்கத்தயார் என்று அவர்கள் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார்கள்.

உண்மையிலேயே இலங்கையில் ஒரு உள்ளக விசாணை நடத்துவதன் ஊடாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்குமா? என்பதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி. அரசாங்கம் மாறியதோடு, உள்ளக விசாரணையை வலியுறுத்துவதால் நன்மை கிடை க்கப்போகின்றதா? என்பது இன்னுமொரு கேள்வியாக உள்ளது.

மகிந்த ராஜபக்ஷதான் பிரச்சினை. ஆனால் இன்று இருக்கின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, ரணில் விக்கிரமசிங்கவோ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவோ பிரச்சினை இல்லை என்று எண்ணக்கூடாது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் மத்தியில் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார் போர் நடைபெற்ற கடைசி 3 கிழமையாக நான் தான் பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருந்ததாகவும். போர் வெற்றிக்கு தான் தான் காரணம் என்றும் சொல்லியிருந்தார்.

தமிழர்களை அழித்த தளபதி சரத் பொன்சேகாவின சின்னத்தில் மைத்திரி போட்டியிட்டார். அதற்கு நிபந்தனையில்லாத தமிழ் மக்களின் ஆதரவினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக கொடுத்துள்ளது.

இன்னுமொருவர் ரணில் விக்கிரமசிங்க யுத்தத்தினை வெல்வதற்கு சர்வதேச வலைப்பின்னலை உருவாக்கியது தான் என்கிறார். மற்றுமொருவர், 75 வீதமான போரை தான் வெற்றிபெற்றார் என்கின்றார். தமிழ் விரோதியான ஜாதிக ஹெல உறுமய இவைகள் தான் இப்போதைய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள். இந்த அரசாங்கம் பொறுப்புக் கூறல் என்ற கோணத்தில் தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுக் கொடுப்பார்களா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

இந்த வகையில் தமிழர்களுடைய பொறுப்புக்கூறலை ஒரு உள்ளக விசார ணைக்குகள் கொண்டுவந்து முடித்து பொறுப்புக்கூறலை அடியோடு இல்லாமல் செய்த செயலுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முழுமையாக பொறுப்பெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமஷ்டியை...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பயன்படுத்தியுள்ள சில பதங்கள் வேறுவிதமாக அர்த்தப்படுத்தப்படலாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் அனுரபிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார். சமஷ்டி அவ்வாறான சொல். நீங்கள் அதனை பயன்படுத்தினால் மக்கள் பிரிவினை என கருதுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன சமஷ்டி என்ற கருதுகோள் பழையது. முடிந்து போன ஒரு பிரச்சினையை தமிழ் தேசிய கூட்டமைப்பு மீண்டும் கிளறப்பார்க்கின்றது என கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தனது கட்சியின் நிலைப்பாடு ஒற்றையாட்சியே எனகுறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை ஐக்கிய தேசிய கட்சி நவீன நகரமாக்க விரும்புகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்மந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்தாலோசித்து அவர்களின் இணக்கத்துடனேயே அதிகாரப்பகிர்வு இடம்பெறும் என ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வடமாகாணசபை தேர்தலின் போதும் இவ்வாறான கோரிக்கையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வைத்ததாக தெரிவித்துள்ள ஜே.விபியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், பாராளுமன்ற தேர்தல் வேளையில் அக்கட்சி அதனை மீண்டும் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையின் பேரினவாத கட்சிகள் சிங்கள மக்களின் வாக்குகளை பெற இதனை பயன்படுத்துகின்றன இது ஆரோக்கியமான விடயமல்ல என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## நம்பகரமான...

செயலாளர் நாயகம் கமலேஷ் ஷர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஓகஸ்ட் 17ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலை கண்காணிக்கும் வகையில் மால்டா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் அபேலா தலைமையில் பொது நலவாய கண்காணிப்பு குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இலங்கை தேர்தல்கள் திணைக்களத்தின் அழைப்பின் பேரில் பொதுத் தேர்தலை கண்காணிப்பதற்கென பொதுநலவாய செயலாளர் நாயகத்தினால் மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## அக்ஷன் பாம்...

போது, இந்தப் படுகொலை நடத்தப்பட்டது.

இந்தப் படுகொலை தொடர்பாக முழுமையாக விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென ஏற்கெனவே இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச மட்டத்தில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும், விசாரணைகளில் ஏற்பட்டிருக்கும் தாமதமும் அசமந்தபோக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு பெரும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-11)

## காஸ்...

இந்த அனைத்து விடயங்கள் குறித்தும் பிரதமருடன் கலந்தாலோசித்து விலை குறைப்புக்கள் அமுல்படுத்தப்படும் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் விலை குறைப்பு செய்வது தேர்தல் விதி மீறலாக கருதப்படும் என எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. (எ-11)

## ஒரு டொலர்...

எமது உறுதி மொழி, பத்திரத்தில் உள்ளது. எதிர்காலத்திற்கு நாங்கள் வழங்கியுள்ள உறுதி மொழிகளை நாமே நிறை வேற்றுவோம். அதற்கான நிதி எம்மிடம் உள்ளது. அதனை தேடிக்கொள்ளும் வழியும் எமக்கு தெரியும். அவ்வாறு முடியாவிட்டால் எனது வங்கி கணக்கில் உள்ள 18 பில்லியனை தேடி கொடுத்தாலும் முடியும். வெட்கம் இல்லாத மனிதர்கள். எனக்கு ஒரு டொலர் இருப்பதாக நிரூபித்தால் எனது கழுத்தை அறுத்துக் கொள்வேன் என்றார். (எ-11)

## ஸ்ரீலங்கா...

சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டதைப் போன்று, அவர்களுக்கு ஆதரவளிக்கும் சந்திரிகா குமாரதுங்க மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் நடத்தப்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முதலாவது மத்திய குழுக் கூட்டத்தில் சந்திரிகா குமாரதுங்கவின் உறுப்புரிமை குறித்து விவாதிக்கப்படும் என்று சுசில் பிரேமஜெயந்த மேலும் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரான சந்திரிகா குமாரதுங்க தற்போது அந்தக் கட்சியின் போசகராக பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## கந்தரோடையில்...

சுமார் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான மூன்று சங்கிலிகள், இரண்டு சோடி தோடுகள், காப்புகள் மற்றும் ஆயிரம் பவுன்ஸ் வெளிநாட்டு நாணயம் என்பனவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்த வீட்டுக்கு சற்றுத் தள்ளி உள்ள மற்றொரு வீட்டினுள் நுழைந்த அதே கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களைக் மிரட்டி சுமார் முப்பத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான பணத்தை கொள்ளையிட்ட அதேசமயம் அங்குள்ள அலுமாரிகளில் தேடுதல் நடத்திய போதிலும் தங்க நகைகளை எவையும் கிடைக்காத நிலையில் கைவிட்டுச் சென்றுள்ளார்கள்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். நீண்டகாலத்தின் பின்னர் மீண்டும் இத்தகைய துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (எ-11)


சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX
நல்லூரில் மட்டும்தான் சரவணா ரெக்ஸ் உள்ளது
நல்லூரில் மட்டும்தான் ஆடித்தள்ளுபடி ஆகஸ்ட் 18 வரை
நீங்கள் ஒரு சாறி வாங்கும் பணத்துக்கு இரண்டு சாறி வாங்கலாம்
வேறு எங்கும் கிளைகள் இல்லை
ஆடி சேல் அதிர்ஷ்ட சேல்
526, 529.
பருத்தித்துறை வீதி, நல்லூர். (சிவன்கோயில் அருகாமை) யாழ்ப்பாணம்.
(C-1746)





தேர்தல் கருத்துக் கணிப்பு
மாபெரும் போட்டி
அன்பு வாசகர்களே!
■யாழ்ப்பாணம்-கிளிநொச்சி
■வன்னி
தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள்
1.பெற்றுக் கொள்ளும் ஆசன எண்ணிக்கை?
2.பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்கள்?
உங்கள் கருத்துக்களுக்கு பெறுமதியான பரிசில்கள்
நாளைய வலம்புரியில் முழு விபரம் பார்க்க... பங்குபற்ற... தவறாதீர்கள்...


## பாரத...

13 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசேட சம்பவமாக கருதி மூவர் அடங்கிய நீதவான் குழுவொன்றின் ஊடாக விசாரணை நடத்துமாறு சட்ட மா அதிபர் யுவான்ஜித் விஜேதிலக்க நீதமன்றில் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், மூவர் அடங்கிய நீதவான் குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்த நீதவான் குழாமின் தலைவராக உயர் நீதிமன்ற நீதவான் சிரான் குணரட்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பத்மினி ரணவக்க குணதிலக்க மற்றும் எம்.சீ.பி.எஸ் மொராயஸ் ஆகியோர் ஏனைய நீதவான்களாவர்.(எ-11)

## மரண அறிவித்தல்



தோற்றம் 03.12.1940 — மறைவு 03.08.2015

### திருமதி கிருஷ்ணவேணி இராஜேஸ்வரன்

(ஓய்வுபெற்ற அரச தாதி - ஆதார வைத்தியசாலை, மந்திகை.)

நீலர்வளவு', தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணவேணி இராஜேஸ்வரன் 03.08.2015 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இலக்கணநாயகியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜேஸ்வரனின் அன்பு மனைவியும், ரோகினி, அமரர் ஜங்கரன், மைதிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சேகர், சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கோபிகா, ஜனகன், நவநீதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, வாமதேவன் மற்றும், இராஜலட்சுமி, சிதம்பரநாதன், பானுமதி, சிறீஸ்கந்தராசா, இராமஜெயம் ஆகியோரதும் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜெயபூபதி, சுபத்திரா ஆகியோரதும் சாம்பசிவம், சரோஜினி, கணேசராணி, சிவஜினி, சிவகுமார், கிருஷ்ணவேணி, பகவானை ஆகியோரதும் பாசமிகு அண்ணியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை **09.08.2015 ஞாயிற்றுக்கிழமை** அன்று நடைபெறும். மேலதிக விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : மைதிலி, சிறீதரன் (மகள்)
(0044) 07557648845 (லண்டன் - மைதிலி)
(0044)07500977744 (லண்டன் - சிறீதரன்)
00919840415389 (இந்தியா - ரோகினி)

(சி-1745)


CNR WORLD WIDE EXPRESS & TRAVELS
அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)
சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை
401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062
(C-1747)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த பிரதம...

டமைப்பின் பிரதமர் வேட்பாளர் என ஜனாதிபதி மைத்திரிபால கூறுவாராயின், அப்போது அவருடனான விவாதத்திற்கு தான் தயார் எனவும் ரணில் கூறியுள்ளார்.

இருந்தபோதும், மகிந்தவுடனான விவாதத்திற்கு தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் நடவடிக்கைகள் மிகப் பெரியளவில் பின்னடைவை சந்தித்துள்ளதால், இந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மை வெற்றிபெறும் எனவும் ரணில் விக்ரமசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாட்டை கட்டி எழுப்புவதற்கு ஐக்கிய தேசிய கட்சியிடமே முறையான திட்டம் இருப்பதாக தெரிவித்துள்ள ரணில் விக்ரமசிங்க, தோல்வியடைந்த பின்னர் மீண்டும் மக்களிடம் வாக்குறுதிகளை அள்ளிவீசுவது பயனற்ற செயல் எனவும் கூறியுள்ளார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என ஐக்கிய தேசிய கட்சி கூறியுள்ளது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ரணில் விக்ரமசிங்க, அது பேசி தீர்க்கப்பட வேண்டிய விஷயம் எனவும் கூறினார். (எ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.